உ

ஸ்ரீகுருப்யோநம:

விவேகசிந்தாமணியில்

வேதாந்தபரிச்சேதம்.

இஃது,

காஞ்சீபுரம்,

குப்பாசாஸ்திரியாருடைய

பேருதவியால்,

இயற்றமிழாசிரியராகிய

திருத்தணிகை

விசாகப்பெருமாளையரவர்கள்

முன்னிலையில்

தில்லையம்பூர்ச்

சந்திரசேகரகவிராஜ

பண்டிதரால்

பரிசோதித்தபிரதிக்கிணங்க

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பவ - ௵.

பொருளடக்க அகராதி.

பொருள்.	பக்கம்.
அஞ்ஞானிகளுக்கு விரோதத்திரயம்.	௪௰
அஞ்ஞானிக்கும், ஞானிக்கும் பேதம். ...	௪௧
அஷ்டகுரு.	௰௯
அஷ்டபிரமாணம். ...	௰௭
அஷ்டாதசபுராணம். ..	௭
அதிகாரத்திரயம்.	௰௫
அதிகாரபஞ்சகம், ..	௰௫
அத்தியாசசதுஷ்டயம். ...	௩௨
அநுபந்தசதுஷ்டயம். ...	௰௪
அந்வயபஞ்சலக்ஷணம். ..	௰௪
அபாவசதுஷ்டயம். ...	௨௧
அவதித்திரயம்.	௪௨
அவைதிகசாஸ்திரம். ...	௮
ஆச்சிரமம். ..	௭
ஆதிமார்க்கீகசாஸ்திரம். ...	௰
ஆத்தியாத்மீகசாஸ்திரம். ...	௰
ஆத்மசொரூப லட்சணபஞ்சகம்.	௰௯
ஆத்மத்திரயம். ..	௨௧
ஆனந்தாஷ்டகம். ...	௨௰
இதியாசம்.	௮
ஈச்சுரநாமரூபவிவகாரம். ...	௨௨
ஈச்சுரன்பஞ்சகிருத்தியம். ...	௨௩
ஈச்சுரன்தேகதிருஷ்டாந்தம்,	௨௨
ஈசுரன்பிரபுத்துவசாமர்த்தியகுணம்.	௨௩
ஈச்சுரன்முக்கியகுணம். ...	௨௩
உபதேசக்கிரமம். ...	௰௭
உபநிஷத்து. ...	௪
உபபுராணம்.	௭
உபவேதம்.	௪
உபாதித்திரயம். ..	௩௧
உபாயத்திரயம்.	௰௯
கற்பிதத்துவயம். ...	௰௯
குணத்திரயசிருஷ்டி. ...	௨௭
கூடஸ்தன்பரியாயநாமம். ...	௨௪
கோசபஞ்சகம். ...	௩௪
சட்சமாதி. ...	௪௭
சதுர்வித குருசேவை, ...	௰௫
சதுர்வேதம். ...	௩
சத்தவிதலிங்கதாற்பரியம். ...	௪௰
சத்துத்திரயம், ...	௨௰
சமயிகள்கொண்டகோட்பாடு.	௰௮
சமுசாரகற்பனை. ...	௨௨
சர்க்காதிபஞ்சலக்ஷணம், ...	௭
க்ஷத்திரியதர்மம். ...	௫
சாஸ்திரவரலாறு. ...	௧
சாதனசதுஷ்டயம் ...	௰௮
சாதிவருணம். ...	௫
சாத்திகபஞ்சராத்திரம் ...	௯
சிஷ்யன்விதிவசுவசங்கத்வயம்	௰௩
சித்தசதுஷ்டயம் ...	௨௰
ஸ்ரீகுருவிஞாபனதேசம். ...	௰௭
ஜீவசப்தாவஸ்தை. ...	௩௫
ஜீவநாமரூபவிவகாரம். ...	௨௧
ஜீவன்முத்தனுக்குச் சற்குணசதுஷ்டயம்.	௪௭
ஜீவன்முத்தருடைய சாபாநுக்கிரகசாமர்த்தியம்,	௪௯
ஜீவன் முத்தர் பஞ்சபிரயோசனம்	௪௭
ஜீவன்முத்தர் விசித்திரசரித்திரம்.	௪௪
சுருதியுக்திவாக்கியம். ...	௩௯
சூத்திரதர்மம். ...	௭
செகத்கர்த்தா. ...	௨
செகக்காரணம். ...	௨
ஸ்மிருதி.	௫

பொருளடக்க அகராதி.

பொருள்.	பக்கம்.
ஞானத்சச்சின்னம் நிக்கிரஹக்கிரமம்.	௪௮
ஞானபலசதுஷ்டயம். ...	௪௪
ஞானபூமிசப்தகம். ...	௪௩
திரிபுடி. ...	௨௯
திர்க்குவிவேகம், ...	௰௮
திர்சியவிவேகம். ...	௨௫
நாநாமதசாஸ்திரம். ...	௩
நாநாமதஸ்தருடைய ஆத்மநிரூபணம்.	௫௧
நாநாமதஸ்ருடைய மோக்ஷலக்ஷணம்.	௰௨
நிதித்தியாசனயோகபஞ்சகம்.	௪௧
பஞ்சாவஸ்தை. ...	௩௨
பரிச்சேதத்திரயம். ...	௨௧
பிரகிருதிகாரியோதயத்திரயம்	௨௯
பிரதிபந்தத்திரயம். ...	௪௨
பிரபஞ்சத்துவயம். ...	௩௧
பிராமணதர்மம். ...	௫
பிராரத்தகர்ம சமஸ்கார சதுஷ்டயம்.	௪௮
பிராரத்தத்திரயம். ...	௪௯
பிரமத்தின் பரியாயநாமம், ...	௨௪
மகாவாக்கியம். ...	௩௭
மங்களசரணை. ...	௧
மங்களாசரணத்திரயம். ...	௰௪
மனனசகாயத்திரயம், ...	௪௧
மர்யாகாரியோதசதுஷ்டயம்.	௩௰
மாயாகுணத்துவயம். ...	௨௬
மாயாதர்மத்துவம. ...	௨௬
மாயாநாமபஞ்சகம். ...	௨௬
மாயாநிர்வாச்சியநவப்பிரகாரம்.	௨௫
மாயாலக்ஷணபஞ்சகம், ...	௨௫
மாயாவிர்த்தித்திரயம் ...	௨௬
மீமாங்கிசசாஸ்திரம். ...	௰௩
முக்திசம்சயவாக்கியம். ...	௩௯
முக்திவிக்கினத்திரயம். ...	௩௯
யுகதர்மம். ...	௫
ரூபத்துவயம். ...	௨௪
லௌகிகசாஸ்திரம். ...	௯
விஷயத்திரயம். ...	௩௰
விதேககைவல்லிய மடையுங்கிரமம்,	௫௧
வித்தியாத்துவயம். ...	௪௫
வியாக்கியானபஞ்சலக்ஷணம்.	௰௪
விவகாரம்பகம். ...	௭
வேதவாக்கியத்திரயம். ...	௩௭
வேதவாதசதுஷ்டயம், ...	௩
வேதாங்கம். ...	௩
வேதாந்தசாஸ்திரம். ...	௰௩
வேதோபாங்கம். ...	௪
வைசியதர்மம். ...	௬
வைதிககசாஸ்திரம். ...	௯

பொருளடக்க அகராதி

முற்றிற்று.

உ

சுபமஸ்து.

ஸ்ரீகுருப்யோநம:

வேதாந்த விவேகசிந்தாமணி.

பிரகரணோற்பத்தி.

ஸ்ரீமதநேக லோகயதார்த்தமான வேதாகமபுராணசாஸ்திரங்களின் அர்த்தத்தைச்சமஸ்தரும் அபிவியக்தமாகக் காணும்படி காட்டுகையால், விவேகசிந்தாமணியென்றிதற்கு நாமதேயம், நீ யிதனைக்கிருபையுடனேகேட்பாயாகவென்று ஆசாரியர் சிஷ்யனுக்கு அனுக்கிரகிக்கும்படி.

மங்களாசரணை.

ஸ்ரீமதநேகபுவனபவனாரம்ப மூலஸ்தம்பரூப சம்புலிங்கமாதி நிராகாரதேசிகோத்தம பரியந்தமான குருபரம்பரையை, மனோவாக்குக் காயங்களால் நமஸ்காரம் பண்ணுகிறேன், மற்றுமுண்டான நமஸ்காரலக்ஷண மங்களாசரணத்தால் நிர்விக்கினமாக இந்தப்பிரகரணம்முற்றுப்பெறக்கடவது. இதில் சிஷ்யபிரசிஷ்யப் பிரவாகப் பிரவர்த்தனைகளைக்கேட்குமவர்களுக்குச் சித்தசுத்தி மலத்திரய சுத்தியாகுமென்று நிச்சயிக்கப்படும்.

சாஸ்திரங்களின் வரலாறு.

அநாதிநிர்மல சித்துருபனாகையால், சர்வோத்கிருஷ்டனாகி சர்வஞ்ஞத்துவாதிகுணசகிதனான ஈச்சுரனாற்சொல்லப்பட்ட பரமப் பிரமாணமான ஆகமவேத சம்பந்தத்தின் உபயமேமூலமாக ஸ்மிருதி புராண இதிகாசபுராதன யுக்தானுசாரத்தால், அனுபவிகளா மென்னத்தக்கதாக சுவகபோலகற்பிதமில்லாமல், சாராற்சாரமான சத்தியார்த்தங்களைச் சங்கிரகித்து, முன்னுள்ளாரத்தினாதிகளை யொப்பமிட்டுத்தரமறிந்து சாமர்க்கோவைசெய்ததனால், நவீனகர்ணபரணமென்று சொல்லுமாபோல, முமுட்சுசனங்கள் இந்தச்சகத்தில்ஸ்திதிகதிகள்எந்தப்பிரகாரமோவென்று தேடி ஆயாசப்பட்டாமல், அபிவியக்தமாய் இதனால் மகாலீலாவினோதங்களையறிந்து, கிருதார்த்தராக வேண்டுமென்று நிசகுணையோ

கி கன்னடத்திற் சொன்ன வசனரசனைகளை யான் தமிழிற் சொல்லுகி றேன். அதெப்படியெனின்.

செகத்காரணம்.

பிரதமத்திற் சட்சுராதி பாகியேந்திரிய கோசரமாய்க்காணுஞ் சக த்துக்கு வெவ்வேறுயுத்திகுண அவயவாகாரமாகையால், கடம்போலக் காரியமாய்க் குலாலனைப்போல நிமித்தியகாரணனான ஈச்சுரனால் சக்க ரதண்டம்போலப் புண்ணியா புண்ணியமான சககாரிகாரணத்தால்,மி ருத்திகைபோலப் பிந்துமாயையான சுத்தாசுத்த மாயாவுபாதான கார ணத்தாற் கமனாகமன சுகதுக்காதி யநேக விவகாரபேதங்களோடு பின் னரான ஆத்மாக்கள் போகமோக்ஷார்த்தமாய்ச் சனித்தனவென்றறிக.

செகத்கர்த்தா.

பிரகிருதி பரமாணுகாலகர்ம்மாதிகளே சகத்கர்த்தாஈச்சுரன் அல்ல வென்மையாகில், பிரகிருதி முதலானவெல்லாஞ் சடரூபமாகையால், சைதந்யாதிஷ்டானமில்லாமல் தாமே சகம் நிர்மிக்கமாட்டாதென்பது நிச்சயம். ஆனால் சேதனனான சீவனே சகத்கர்த்த னென்றால் அவ னுக்குக் கிஞ்சக்கித்து வாதிஷ்டான பாரதந்திரத்துவ அநீச்சுரத்துவாதி தோஷமுண்டாகையால், அவன் சகத்துக்குக்கர்த்தனாகமாட்டான். பா ரிசேஷிய நியாயத்தால் ஈச்சுரனே கர்த்தனென்று நிச்சயிக்கப்பட்டும். சகத்துருபம் மகாகாரியமாகையால் ரதத்தைச்செய்வாரைப்போலவெ குகர்த்தத்துவமுண்டென்மையாகில், அது ரதாசாரியனென்னும் ஒரு வன் சூத்திரத்தாலாவதல்லது, மற்றவர்களாலல்ல. அவரவர்கள் அபி மானத்தால் தங்களுக்குத்தாங்களே ரக்ஷித்துக்கொள்ளுங் காரியமானு ல், அநேககர்த் தவ்வியத்தால் ஒருகாரியமு மாகாது. ஆகையால் சகத் துக்கு ஈச்சுரனொருவனே கர்த்தனாக வேண்டும். அந்த வொருவனாகிய ஈச்சுரனுக்கே எக்காலத்திலும், எத்தேசத்திலும்காரியோதயமுண்டா கையால், நித்தியத்துவமும், வியாபகத்துவமும், எக்காரியமும் அறிவ தற்கும், செய்வதற்குஞ் சமர்த்தனாகையால், சர்வக்ஞத்துவமும், சர்வ சத்தித்துவமும். காலமானதுதான் அமிர்தமாய்ப் பல்லவகுசுமாதிகளை யுண்டாக்குமாபோலச், சகலகாரியோற் பாதகனாகையால் நிட்களத்து வமும், சர்வாத்துமாக்க ளிதயத்திலும், அந்தரியாமியாகிப் புறம்பே சு ருதி ஸ்மிருதிரூபமான ஆக்கினையால், நியாமகனாகையால் சர்வபிரேரக த்துவமும், குலாலாதி கர்த்துருத்துவத்தால் அந்நியமான கடபடாதி

யை நியமிக்கிறதெப்படியோ அப்படி அந்தியசரீராதியை நியமிக்கையாலும், விசுவமெல்லாம் விசுவேச்சுரனால் நியமமானதென்று சுருதியுண்டாகையாலும், சர்வாத்துமகத்துவமும், தனக்குப் பிதாகர்த்தரின்றி அத்துவிதிய னாகையால், சர்வசுதந்திரத்துவமும், ஆத்மாக்கள் செய்த கர்மத்துக்கேதுவான சுகதுக்கங்கொடுக்கையால் ராகத்து வேஷாதிகத்துவமும் தன்னால் சிருஷ்டியான வியோமாதிவிசுதிவிசுவத்தை வேறொரு பிரகாரமாகச் சிருஷ்டிசெய்வதற்குப் பிறதிசமர்த்தரில்லாமையால் சர்வேச்சுரத்துவமும், உண்டென்பது நிச்சயம்.

நா நா ம த சா ஸ் தி ர ங் க ள்.

அந்த ஈச்சுரனால் நிர்மிதமான சேதனாசேதன ரூபசகத்தில், போக மோக்ஷார்த்தமாய், வெவ்வேறாகப்பிரவர்த்திச்சிருக்கிறநானாவாதிகளின் அபிமதமான சாஸ்திரங்களியாவையெனின்.

சதுர்வேதம்.

முதல்முக்கியபிரமாணம் - இருக்குவேதம் - எசுர்வேதம்-சாமவேதம் - அதர்வணவேதமென்னுமிவைகள், இவை சுவயம்புவென்றும், ஈச்சுரனாற்சொல்லப் பட்டவைகளென்றுஞ்சொல்லப்படும். அவற்றுள் இருக்குவேதம் - இருபத்தொருபேதம். எசுர்வேதம்- நூற்றொருபேதம். சாமவேதம்-சகஸ்திரபேதம். அதர்வணவேதம்-நவபேதமாம்.

வேதவாதசதுஷ்டயம்.

அந்தவேதம், எதைச்சொல்லுமென்றால், விதிவாதம், அர்த்தவாதம்,மந்திரவாதம், நாமதேயமென் நான்குபேதத்தால் சமஸ்ததர்மங்களையுஞ் சொல்லும். அவற்றுள் இராசாவாக்கினையைப்போல மனிதனை நிஷேதகர்மஞ்செய்யாமல் திருப்பிச் சுகர்மஞ்செய்யவேண்டு மென்பதே விதிவாதம், பட்டுக்களைப்போல ஸ்துதிக்கிறதே அர்த்தவாதம். ஆசாரியனைப்போலச் செய்யத்தக்கவைகளைக் காட்டுகிறதேமந்திரவாதம். பிதாவைப்போல யாகாதிகளுக்குப் பெயரிடுகிறதே நாமதேயமாம்.

வேதாங்கம்.

அந்தவேதத்துக்கு-பாதம், அஸ்தம், முகம், கிராணம், நேத்திரம், சுரோத்திரமென்னும் அனுக்கிரமத்தில், சந்தசு, கற்பம், வியாகரணம்,சி

க்ஷை, சோதிஷம், நிருக்தியமாகிய ஆறும் அங்கங்களாம். அவற்றுள், சந்தசு—மந்திரசுலோகாதிகளுக்கு அக்ஷரகணிதஞ்செய்யும் கற்பம்—ஆசுவலாயன, போதாயன, ஆபஸ்தம்பாதி சூத்திரங்களில் யக்கியப்பிரயோகாதிகளைக் கற்பிக்கும். வியாகரணம்—வைதிகசாஸ்திரார்த்தசித்தியைச்சமர்ப்பிக்கும். சிக்ஷை—உதாத்த—அனுதாத்த, ஸ்வரித, பிரசயமென்னுஞ்சதுர்விதஸ்வர கரண பூர்வகமான பதபாளிக்கிரமவேதாத்தியாயனாதிகளைச்சொல்லும். சோதிஷம்—லக்கின, திதிவார, நக்ஷத்திர, யோககரணாதிகளால், வைதிககர்மங்களுக்குக், காலந் தெரிவிக்கும். நிருக்தி-வைதிக சப்த நிர்வசனத்தை நியமிக்கும்.

வேதோபாங்கம்.

அந்தவேதத்துக்கு, ஸ்மிருதி, புராண, நியாய, மீமாங்கிசை என்னும் நான்கும் உபாங்கமாம். இவற்றினிலக்கணமேற் சொல்லுதும்.

உபவேதம்.

அந்தவேதத்துக்கு, ஆயுள்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதமென உபவேதம் நான்குண்டு. அவற்றுள், ஆயுள்வேதம்—வியாதிநிதானம் வியாதிச்சின்னம், மந்திரௌஷதாதி சிகிச்சைகளால் ஆயுராரோக்கியாதிகளைக் காட்டும். அர்த்தவேதம், தக்ஷிணை, ஆச்சியம், சருமுதலான உபகரணங்களால் கர்மாதி சதுஷ்டயத்துக்குச் சாதனமாம். தனுர்வேதம்—சத்துரு க்ஷயார்த்தமான மந்திராஸ்திரப்பிரயோகங்களைக் கற்பிக்கும். காந்தருவவேதம் —சாமவேதாதிகளின், சரி-க-ம-ப-த-நி-என்னும் சத்தஸ்வர கீதப்பிரபந்தங்களை விவகரிக்கும்.

உபநிஷத்து.

அந்தவேதத்தில், சிருத்திரம், பிரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாஸ்கரம், பிரமபிந்து. ஆருணி, அமிர்தபிந்து, சுரசபிந்து, பிரமகபாலம், தேஜோபிந்து, வாசசநேயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசியாயநீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பாக்கிரமம், புரோஷ்யம், முத்கலம், முண்டகம், மைத்திராயநீயம், என்னும் - ௩௨ - உபநிஷத்துக்களும் ஞானங்கமான விபூதி ருத்திராக்ஷாதிகளையும், பிரமஞ்ஞானாதிகளையும் விவகரிக்கும்.

ஸ்மிருதி.

மனு, அத்திரி, ஔரிதம், விஷ்ணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கிரசம், யமம், ஆபஸ்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிரகஸ்பதி, பாராசரம் வியாசம், சங்கலிதம், தக்ஷம், கௌதமம், சாதான்மம், வசிஷ்டம், என அந்தந்நாமதேயமுள்ளவர்களால் சொல்லப்பட்ட தர்மசாஸ்திரம் - ௰௬.

யுகதர்மம்.

கிரேதாயுகத்தில் மநுஸ்மிரிதிதர்மமும், திரேதாயுகத்தில் கௌதமஸ்மிருதிதர்மமும், துவாபரயுகத்தில் சங்கலித ஸ்மிருதிதர்மமும், கலியுகத்தில் பராசரஸ்மிருதிதர்மமும் முக்கியமாம். இந்த ஸ்மிருதிகளில், சாதிவருணாச்சிரமங்களும், தாயாதி விவகாரங்களும், அஷ்டாதச விவகாரங்களுடைய பேதங்களும், மகாபாதகங்களுக்கு பிராயச்சித்தாதிவிதிகளும் சொல்லும்.

சாதிவருணங்கள்.

அவற்றுள் கம்மியம். அல்லது மஹாராஷ்டிரம், கன்னடம், ஆந்திரம், திராவிடம் எனச் சாதி-௪.—பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வொண வர்ணம்-௪.

பிராமணதருமம்

இந்நான்கில் கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம், உன்னயனம், சாதகர்மம், நாமகரணம், உபநிஷ்கிரமணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், மகாநாமியம், மகாவிரதம், உபநிஷத்து, சோபனம், உத்துவகனம், பிருதியென்னும் சோடசகர்மங்களுடனே, யசன, யாசன, அத்தியயன, அத்தியாபன, தான, பிரதிக்கிரகமென்னுஞ் சட்கர்மமும், சிவபத்தியாதி சகலசற்குணங்களுடனேகூடினவன் பிராமணன்.

க்ஷத்திரியதருமம்.

பிரசாபாலன, யசன, அத்தியயன, துர்ச்சன, துஷ்டமிருகம், பக்ஷி, சத்துருசங்காரம், அன்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், பூதானம், கோதானம், உபயமுகிதானம், இரண்ணியதானம், மகிஷதானம், அசுவதானம், ஏவேதாசுவதானம், காலதானம், காளாமுகிதானம், மகாமேருதானம், கற்பகவிருக்ஷதானம், வித்தியாதானம், மகாதா

ஞந்தரார்த்தமாகிக் காலதேச பாத்திரபரீக்ஷை விஷ்ணு பக்தியாதி கர்மயுக்தனானவன் க்ஷத்திரியன்.

வைசியதருமம்.

பிரதமஸ்தானதி - ௩௯ - ஸ்தானபரியந்த மானயக்கம் - தசம் - சதம் - சகஸ்திரம் - தசசகஸ்திரம் - லக்ஷம் - தசலக்ஷம் - கோடி - தசகோடி - சதகோடி - அற்புதம் - நிர்ப்புதம் - கர்வம் - மகாகர்வம் - பற்மம்-மகாபற்மம்-க்ஷோணி-மகாக்ஷோணி - சங்கம்-மகாசங்கம்- க்ஷிதி- மகாக்ஷிதி - க்ஷோபம்- மகாக்ஷோபம் - நிதி-மகாநிதி - சாகரம்- மகாசாகரம் - அரி - மகாஅரி - சங்கை- மகாசங்கை - பணி -மகாபணி- கிருது- மகாகிருது : இலக்கங்களும், யக்கம்—ஏகம், ரூபம், பூமியாதிசமிஞ்ஞை(௧) துவே—துவவ்துவந்துவ துவிதம், துவய, விதிய, யுக்கும, யுகள , யுக, உபய, பாகு, பாத, பக்ஷ, நயனதி, சமிஞ்ஞை, (௨) திரி—திரய, திரிதிய, ஹரநயன, அக்கினி, புராதிசமிஞ்ஞை, (௩) செள்ள—சதுர்த்தி, வேத, வர்ண, ஆச்சிரமாதிசமிஞ்ஞை, (௪) பஞ்ச—ஹரவக்த்ர, கஷாய, விருத, இந்திரிய, விஷய, பாண, பாண்டவபூதாதிசமிஞ்ஞை, (௫) ஷடு—பாவ, ராசாங்க, இருது, ரச, ஸ்கந்தமுக, வேதாங்க, வர்ணகர்ம, தரிசனதிசமிஞ்ஞை: (௬) சத்த—முனி,கிரி, தானங்க, ராசாங்க, துரக, தாது, சாபாங்க, ஸ்வர, சாகராதிசமிஞ்ஞை, (௭) அஷ்ட—வசு, திக்கு, கஜ, மத, விகாரகாமாதிசமிஞ்ஞை, (௮) நவ—திரவியாந்திரு, நிதி, கிரக,ரத்நாதிசமிஞ்ஞை, (௯) தச—பிந்து, சூன்யநாஸ்தி, அவதார, ககனதி, சமிஞ்ஞை (௰) இவைமுதலான சமிஞ்ஞையுமறிந்து, கிரமுகாதிவஸ்துக்கள் எண்ணியறிந்து, பத்தரைப்பபணத்திடைகழஞ்சு கழஞ்சு -௪- கூடினது, கரிஷம், கரிஷம்-௪-கூடினது பலம், பலம் - ௪௰-கூடினது வீசை, வீசை - ௫ - கூடினது துலாம், துலாம்-௱௨௰-கூடினது பாரம், பாரம் - ௰ - கூடினது அஸ்தமென்று கர்ப்பூராதிதூக்கி அறிந்து, ஒரு சிட்டி நிகுஞ்சம்-நிகுஞ்சம்-௪-கூடினது குடுவம், குடுவம்-௪-கூடினது பிரஸ்தம், பிரஸ்தம் - ௨ - கூடினது வாகம், வாகம் - ௨ - கூடினது ஆடகம், ஆடகம் - ௪- கூடினது துரோணம், துரோணம் - ௫ - கூடினது கரிஎன்னுந் தான்னியாதியளந்தறிந்து சுவர்ணத்தின் மாற்று, பிரவாளத்தின் கழஞ்சு, மணியின் சவ்வு ரத்தினத்தின் சூக்கிரபரீக்ஷை, வச்சிரத்தின்மஞ்சாடி, பச்சையின் ரதியமுதலியவறிந்து, கிரயம், வட்டம், வட்டி, முதலியவறிந்து செய்கிறவாணிச்சியம், கிருஷி, கௌபாலிகம், யசன, அத்தியயன தானமுடன் சூரியாதிபத்தி கர்மயுக்தனானவன் வைசியன்.

சூத்திரதருமம்.

பிராமணாதி வர்ணத்திரய சேவை, க்ஷேத்திராகைக்ஷ சகல தேவதா பத்திமுதலான கர்மயுத்தனுள்ளவன் சூத்திரன்.

ஆச்சிரமம்.

பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமெனஆச்சிரமம்-௪.

விவகாரபதம்.

கடன்கோடல், உபநிதி. கூடிமேம்படல், நல்கியதைநல்காமை, ஒப்பிப்பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையனல்லான்விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடுகடத்தல், நிலவழக்கு, மாதராடவர்தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை,சூது, ஒழிபுஎன்னும் விவகாரபதங்கள்-௰௮.

அஷ்டாதசபுராணம்.

பிரமம், பதுமம், விஷ்ணு, சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பௌஷ்யம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மச்சியம், காருடம், பிரமாண்டம், எனச் சிவப்பிரசாதத்தால்வியாசரிஷி ஈஸ்வரர்சொன்னவேதவிஷ்டசாரார்த்தப் பிரதிபாதகமான நாலுலக்ஷஞ் சங்கியையுள்ள அஷ்டாதசபுராணங்களில்-சைவஸ்காந்த, இலிங்க, கூர்ம, வாமன, வராக,பௌஷ்ய மச்சிய, மார்க்கண்டேய, பிரமாண்டமென்னுமிவை-௰-ம்-சிவபுராணம். நாரதீயம், பாகவதம், காருடவிஷ்ணுவென்னுமிவை-௪-ம்-விஷ்ணுபுராணம். பிரமம், பதுமமென்னுமிவை-௨-ம்-பிரமபுராணம் பிரமகைவர்த்தம், சூரியபுராணம், ஆக்கினேயம்,அக்கினிபுராணம். இந்தஏற்றத்தாழ்வினாலேயே தேவதாதாரதம்மியமு மறிந்துகொள்க.

சர்க்காதி பஞ்சலக்ஷணம்.

இந்தப்புராணங்களில் - சர்க்க, பிரதிசர்க்க, வங்கிச, மனுவந்தர, வங்கிசானுசரிதம் என்னும் பஞ்சலக்ஷணங்களும், வைதிக தாந்திரிகமமுஞ் சொல்லும்.

உபபுராணம்.

சனற்குமாரம், நாரசிங்கம், நந்தி, சிவதருமம், தூர்வாசம்,நாரதீயம், கபிலம், மானவம், உசனம், பிரம்மாண்டம், வாருணம், காளி, வாசிஷ்டலிங்கம், சாம்பவம், சௌரவம், பாராசரம், மாரீச்சியம், பார்க்கவம்

என்னுமிந்நாமதேய முள்ளவர்களால் நிர்ம்மிதமான அஷ்டாதசவுப
புராணம், வைதிகதர்ம்மே பிரதிபாதிக்கும்.

இதியாசம்.

பாரத இராமாயணாதிகள்வியாச வான்மீகாதிகளாலுண்டானஇதியா
சங்கள், சத்துவாதிகுணபேதகங்களும், தேவத்திரயலக்ஷணங்களும்,
தேவதானவாதிகள் சனன்க்கிரமமும், யுதிஷ்டிர ராமச்சந்திராதிகள்ச
ரித்திரங்களும், வைதிகாதிதர்ம்மங்களும், கிரிடிகரித்துச்சொல்லும்.

அவைதிகசாஸ்திரத்திரயம்.

இதற்குமேல், பிரகஸ்பதி, ஆகித, சுகதவென்னுமிவர்களால் கிரமத்
திற்சொல்லப்பட்ட- சாருவாக- ஜைந- பௌத்தமென அவைதிகசாஸ்
திரத்திரயமுண்டு, அவற்றுள்- சார்வாகமாவது- பிருதிவியாதிசதுர்வி
தபூதவிகாரமான சகத்துள், சுகமேசுவர்க்கம்- துக்கமேநரகம்- இவை
யன்றி வேறே சுவர்க்க நரகமில்லையென்று பிரதிபாதிக்கும்,

சைநமாவது- சித்த, பத்த, நாரகிகளென்னும் புருஷத்திரய லக்ஷ
ணங்களையும், ஒட்டைச- ஓட்டாமிலேச, சுவாமின கற்ப, பதுமாவதிகற்
ப, சாரதாகற்ப - குக்குடனாதி கற்பாதிகளையும், மந்திரௌஷத தாதிப்
பிரியோத்திருக்களான பரம சித்தர்களையும், ஞானகேச, திகம்பர, பா
ணிபாத்திர, மயூரபிஞ்ச, பஞ்சமல தாரணாதிகளின் கொலை,களவு,கள்,
காமம், பொய்களில்லையான பஞ்சாணு விரதங்களில் மதுக, பலண்டு,
முதலானநிஷேதகிரவியங்களை வர்ச்சித்து. தப்த சிலாசயனாதி உக்கிர
தபசாசரிக்கிற முனிவிருத்திகளையும், ஏமசந்திர, நாகசந்திர, நேமிசந்
திர, ஏகிசந்திர, மாகசந்திர, அருகந்த- ஆதிநாத- அசகள- பாரீஸ்வநா
த- சௌகத- சுருதி கீர்த்தி- ஸ்ரீமத்காமரகித முனிசுவாமி முதலான-
(உச) தீர்த்தகாருடைய சரித்திரங்களையும், சாதாஸ்தி, சாதாநாஸ்தி
முதலான சத்தபங்கிகளையும், சீவ, சற்சீவ, நிர்ச்சீவ, நிர்ச்சர, ஆசிரவ
பந்த மோக்ஷமென்னும் சத்த பதார்த்தங்களையும், பிரதிபாதிக்கும்,

பௌத்தமாவாது சௌத்திராந்திகம், வைபாடிகம், யோகாசாரம்,
மாத்தியமிகமென, நான்கு பிரகாரமாய் பிருதிவியாதி புத்தி, யாந்தமா
ன (உக) தத்துவாத்மகமான பிரபஞ்சம், தீபச் சுவாலையைப்போல
க்ஷணிகமாத்திரமென்று பிரதிபாதிக்கும்.

இதற்குமேல் நிஷேதகர்ம்மசாஸ்திரங்களுண்டு அவை- சத்தியநாத
ர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர்,
மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர் என்னும், நவநாத

சித்தர்களால் கற்பிதமான- கௌள-யாமளாதி- இம்சை- மைதுனாதி-நிஷேதகர்ம்மமுள்ள சாஸ்திராந்திரங்கள், அபிசாரகர்ம்மசனிதவியாதியாதியால், அகால மிருத்துரூபமான மரணசுழுத்தி விஷமூர்ச்சாதிரூபமோகனமும், அக்கினிஸ்தம்பனை, ஜலஸ்தம்பனை, இந்திரியஸ்தம்பனை, கட்கஸ்தம்பனை, சிங்வைஸ்தம்பனை, கதிஸ்தம்பனாதி ஸ்தம்பனமும், பூர்வசுகாசிரமவிரசனாத்மகமான- உச்சாடனமும், வஸ்திராபரணவனிதாதி வஸ்துக்களை நிஜஸ்தானத்திலிருந்து அழைப்பிக்கும் ஆகருஷணமும், பிராண சினேகமான விடத்தில் 'அந்நியோந்நிய விரோதமுண்டாக்குகிறவித்வேஷணமுமான, ஷட்கருமங்களையும், ராஜவசியாதி வசியங்களையும், சுராசுரபூதக்கிரகா வேசங்களையும், பாதுகாசித்தி, அஞ்சனசித்தி, குடிகாசித்தி, மூலிகாசித்தி, ரசவாதங்களையும் பிரதிபாதிக்கும்.

சாக்திகபாஞ்சராத்திரம்.

இதற்குமேல், சத்திதத்துவவாசியென்னும், ஒருஆத்துமனாலும் வாசுதேவனாலும் கிரமத்தில் பிரதிபாதிக்கப்பட்ட அனுக்கிரமத்தில் சாக்திகம்-பாஞ்சராத்திரமென சாஸ்திராந்தரத்துவயமுண்டு - அவற்றுள்-சாக்திகம்- சடாசடப்பிரபஞ்சமெல்லாம் சத்திபரிணாமமென்பது முதலாக மதவிஸ்தாரஞ்செய்யும்.

பாஞ்சராத்திரம் - பிருதிவியாதிமான சாந்தமான சதுர்விம்சதி தத்துவத்துக்குமேல் குணதத்வாத்மக வாசுதேவனால் சக்திதாதாத்மீகமாயுண்டான கிருஷ்ண - அனிருத்த - மகரத்துவச - ஔகிணேயனென்னும் நால்வராலுற்பத்தி முதலான கிருத்தியமென்று பிரதிபாதிக்கும் இதன்மேல் லௌகிக - வைதிக-ஆத்தியாத்மக - ஆதிமார்க்கிக-மாந்திரிகமென பஞ்சவிதசாஸ்திரங்களுண்டு - அவற்றுள்.

லௌகிகசாஸ்திரம்,

தன்மந்திரியாதிகளாற்சொல்லப்பட்ட ஆயுள்வேததண்டநீதிமுதலான சாஸ்திரம், திருஷ்டபலன்களைப் பிரதிபாதிக்கும்.

வைதிகசாஸ்திரம்

ஜைமுனி - அக்ஷபாத - கணாதனென்னும் ரிஷியீச்சுரர்களால் கிரமத்தில் சொல்லப் பட்ட - பூர்வமீமாங்கிசை - நியாய - வைசேடிகமென

திருஷ்டா திருஷ்டபலன்களைப் பிரதிபாதிக்கிற சாஸ்திரத்திரயமுண்டு அவற்றுள் - பூர்வமீமாங்கிசையென்பது உபக்கிரம முதலான சட்வித லிங்கதாற்பரியத்தால், வேதவாக்கியவிசாரபூருவகமாய், சோதிஷ்டோம யாகாதிகர்ம்மங்களை விதியுக்தமாகச்சொல்லும்.

நியாயமாவது-பிரமாண-பிரமேய-சம்சய-பிரயோசன-திருஷ்டாந்த-சித்தாந்த-அவயவ-தர்க்க-நிர்ணய-வாத-ஜல்ப-விதண்டா-ஏத்துவாபாச-சல-சாதிநிக்கிரக, ஸ்தானமென்னும்சோடசபதார்த்தமுஞ்சொல்லிப் பிரபஞ்சத்துக்கு ஈச்சுரனே கர்த்தாவென்று நிச்சயிக்கும்.

வைசேடிகமாவது, திரவிய, குண, கர்ம்ம, சாமான்னிய, விசேஷ, சமவாய அபாவமென்னும் - சத்தபதார்த்தபிரதிபாதகத்தால் பிரபஞ்ச சொரூபத்தை விவகரிக்கும்.

ஆத்தியாத்மீகசாஸ்திரம்.

கபில-பதஞ்சலி-வியாசரென்னுமுனிவர்களால் கிரமத்திற் சொல்லப்பட்ட - சாங்கிய - பாதஞ்சல- வேதாந்தமென - ஆத்மக்கியான பலன்களுள்ள ஆத்தியாத்மீக சாஸ்திரத்திரயமுண்டு-அவற்றுள்.

சாங்கியம் - நித்திய நிர்ம்மலமான ஆத்மசந்நிதானத்தில் குணத்திரயாத்மகப் பிரகிருதியே பஞ்சவிம்சதிதத்துவாத்மகசகத்தாய் விவகரிப்பதே சம்சாரபந்தமென்றும்-சத்துவாதி குணத்திர யானுக்கிரமத்தால் சேத்மப்பிரகிருதி - பித்தப்பிரகிருதி - வாதப்பிரகிருதியினுள்ள சாந்தி - குரோத - மூடாதிகுண யுக்தமான-உத்தம-மத்திம-அதம- புருஷத்திரய - வர்ண - நீதிமுதலானவைகளுண்டாமென்று சொல்லும்.

பாதஞ்சலம் - இயம - நியமாதி அஷ்டாங்கயோகத்தால், மனோநிச்சல சித்தியாமென்றுசொல்லும்.

உத்தரமீமாங்கிசை - உபநிஷதர்த்தப் பிரதிபாதகமான வேதாந்தம் பிரபஞ்சத்துக்கு மித்தியாத்துவஞ்சாதித்து அதனால் பிரமாத்மஐக்கியத்துவம்வர்ணிக்கப்பட்டும், பாஸ்கரீயம், மாயாவாதம், சத்தப்பிரமவாதம், கிரீடாப்பிரமவாதமென நான்குபேதமாம். இதற்குமேல்.

ஆதிமார்கீகசாஸ்திரம்.

மாயாதத்துவ - வித்தியாதத்துவ வாசிகளானருத்திராற்சொல்லப்பட்ட பாசுபத - காபாலிக-மாவிரதமென-ஆதிமார்க்கீகசாஸ்திரத்திரயமுண்டு-அவற்றுள்.

பாசுபதம், மாயாகர்ம்மாதிகளைச்சொல்லும்

காபாலிகம், நரகபாலபிக்ஷாடனாதிகளைச்சொல்லும்.

மாவிரதம் - அஸ்திதாரணாதிகளைச் சொல்லும்.

நாநாமதஸ்தர்களுடைய ஆத்மநிருபணம்.

இப்படிச்சொன்ன சமஸ்தமதாந்தரங்களில் பிரதிபாதிக்கும் ஆத்மசொரூபமாவது.

சார்வாகன் - ஆத்துமன் - தேகமேயென்பன்.

சார்வாகஏகதேசி - ஆத்துமன் - இந்திரியமேயென்பன்,

இரணியகர்ப்பனென்னுஞ் சார்வாகஏகதேசி - ஆத்துமன் - பிராணனேயென்பன்.

சைநன் - ஆத்துமன் - தேகாதிவிலக்ஷணனாய் தேகபரிணமிதனாய்-பரிணமிதமத்தியையில் சங்கோச விகாச தர்ம்மயுக்தனா யிருப்பனென்பன்.

பௌத்தன் - ஆத்துமன் - புத்தியேயென்பன்.

கௌளயாமளசாத்துமிகர் - ஆத்துமன் - ஆனந்தமேயென்பர்.

பாஞ்சராத்திரன், ஆத்துமன், நாடிமத்தியகதனாய், அணுப்பிரமாணனாகவே யிருப்பனென்பன்.

லௌகிகன், ஆத்துமன், தேகபுத்திர களத்திராதி, ரூபனென்பன்,

மீமாங்கிசமேதர்களான பாட்டப்பிரபாகரர் ஆத்துமன் ஸ்வதப் பிரமாணமான ஞானசொரூபனென்பர்.

நியாயவைசேடிகர், ஆத்துமன், ககனம்போல மகத்பரிமாணனாய், பாஷாணம்போலச்சடரூபனானாலும், மனசுசம்யோகத்தால சித்துசமயுக்தனா யிருப்பனென்பர்.

சாங்கியபாதஞ்சலிகர் - ஆத்துமன், அசங்க சின்மாத்திரமென்பர்.

வேதாந்திகள், ஆத்துமன், ஞப்திமாத்திர னென்பர்.

பாசுபதகாபாலிக மாவிரதிகள் - ஆத்துமன், நித்தியவியாபக சைதந்நியனென்பர்.

மாந்திரசமிஞ்ஞாசித்தாந்திகள் - ஆத்துமன் நித்தியவியாபக ஞானக்கிரியா சொரூபனென்பர்.

நாநாமதஸ்தர்களுடைய மோக்ஷலக்ஷணம்,

இனி இந்தச்சகலசமயவாதிகளால் பிரதிபாதிக்கப்பட்ட மோக்ஷலக்ஷணமாவது.

சார்வாகாலௌகிகர் - மரணமேமோக்ஷமென்பர்.

ஜைநன், ஆகாச மத்தியத்துளுத்தரோத் திரகமனமே மோக்ஷமென்பன்.

பௌத்தன், சுகதுக்காதிகளால் மயக்கப்படாமலிருக்கும் சுத்தபுத்தி சந்ததியே மோக்ஷமென்பன்.

கௌளயாமளர், ஆகாசகமனுதிசித்திப்பிராப்தியேமோக்ஷமென்பர்.

சாத்துவிகன், ஆனந்தப்பிராப்தியே மோக்ஷமென்பன்,

பாஞ்சராத்திரிகள், வாசுதேவாத்துமகப் பிரகிருதியில் சொரூப ஆனியில்லாது அடங்குவதே மோக்ஷமென்பர்.

லௌகிகர், இகலோகத்தில் புத்திரதாராதிகளுடன்கூடி வியாதியாதி துக்கமில்லாமல், சுகத்திலிருக்கிறதே மோக்ஷமென்பர்.

பூர்வமீமாங்கிசிகள், சுவர்க்காதிலோகப்பிராப்தியேமோக்ஷமென்பர்.

நியாய வைசேடிகர், ஆத்துமன் சரீரேந்திரியாதி இருபத்தொருதுக்கஆத்தியந்தநாசத்தால் பாஷாணம் போலிருப்பதே மோக்ஷமென்பர்.

சாங்கியர், பிரகிருதி புருஷவிவேகத்தால், அவித்தியா நாசமானதே மோக்ஷமென்பர்.

பாதஞ்சலிகர், யோகாப்பியாச பலத்தான் மனோலயத்துவாரத்தால் அஞ்ஞானமழிந்ததே மோக்ஷமென்பர்.

வேதாந்திகள், பிரமாத்தும வைக்கிய ஞானத்தால் விவகாராதி சம்சாரபந்த நிவர்த்தியே மோக்ஷமென்பர்.

பாசுபதர், பிரவாகேஸ்வரத்தால் ஈச்சுரத்துவம் அந்நியருக்குக்கொடுத்து ஆத்துமன்ளுப்திமாத்திரமா யிருப்பதே மோக்ஷமென்பர்.

காபாலிகமாவிரதிகள், கர்த்துருத்வமான சம்சார பாவத்தை விட்டு ளுப்திமாத்திரமா யிருப்பதே மோக்ஷமென்பர்,

மாந்திரசமிஞ்ஞா சித்தாந்திகள், ஆத்துமன்சடத்துவாதீத சிவசமானத்துவமாவதேமோக்ஷமென்பர்.

இந்தவாதிகளில் சார்வாக - ஜைந - பௌத்த - மீமாங்கிச - சாங்கிய னென்பவர் - நிரீச்சுரவாதிகள்.

மற்றவர்களெல்லாம் பேசுரவாதிகள் - இந்தமகாவாதிகளில் - சார்வாகாதிகளனைவரும் - பேதவாதவாதிகள் - வேதாந்தியொருவனே அபேதவாதி.

மீமாங்கிசசாஸ்திரவிவரம்.

இப்படிச் சொல்லப்பட்ட சகலசாஸ்திரங்களுக்குள் - வேதம்-(௪) வேதாங்கம் - (௬) வேதோபாங்கம் - (௪) இவை சதுர்த்த சவித்தை யென்னப்படும், இந்தச்சதுர்த்தசவித்தையுள், மீமாங்கிசையாவது, மிகுதியும் விசிஷ்டமாய், இருவது அத்தியாயமாய், அர்த்தப்பிரதிபாதகத்தால், துவிபாகமாம், அவற்றுள், பிரதமபாகம், ஜைமுனிசூத்திரரூபத்தால், துவாதச அத்தியாயமாய்தர்ம்மார்த்தப்பிரதிபாதகமாய், லோக வேதாதிகரண மென்பது முதலான, சகஸ்திரநியாயத்தால், பூர்வமீமாங்கிசையென்னப்படும், அந்த ஜைமுனி சூத்திரத்துக்கு, சபரனென்-சாபரமென்னும் பாஷியஞ்செய்யப்பட்டது. அதற்கே பாட்டாச்சாரியரால், வார்த்திகரூபத்தில பாட்டமெனவொருமதாந்தரஞ் செய்யப்பட்டது. அந்தப் பாட்டருடைய சிஷ்யரானபிரபாகரரால் அந்தசாபர பாஷியத்துக்கே பிரபாகரமென்றொரு மதாந்தரஞ்செய்யப்பட்டது.

இரண்டாம்பாகம்- வியாசசூத்திரரூபத்தால் எட்டத்தியாயமாய்ப் பிரமாத்துமக பிரதிபாதகத்தால், உத்தரமீமாங்கிசை யென்னப்படும் அதனுள்பூர்வம், நாலத்தியாயமும் தேவதாகாண்டமாம். அதில்மந்திரவாதத்தைப்போலத் தேவதாலக்ஷணங்கள் பலபத்திராமரால் பிரதிபாதிக்கப்பட்டது.

வேதாந்தசாஸ்திரம்.

உத்தரமான நாலத்தியாயமும் பிரமகாண்டமாம் அதனுள், பிரமாத்துமயிக்கியப் பிரதிபாதகமாய்ச் சங்கராசாரியரால் பாஷியஞ்செய்யப்பட்டது. அந்த பாஷியத்துக்கே விவரணாசாரியரால் விவரணஞ்செய்யப்பட்டது. அந்த விவரணமே வேதாந்தசாஸ்திரமாம். அதன் விஸ்தாரமாவது.

பிரகரணோற்பத்தி முற்றிற்று.

வேதாந்தசாஸ்திரம்.

மங்களாசரணத்திரயம்.

ஆசீர்வாதம் நமஸ்காரம் வஸ்துநிர்த்தேசமெனு மிவை சாஸ்திராரம்பத்திற் செய்யப்பட்ட மங்களா சரணத்திரயமாம்.

வியாக்கியான பஞ்சலக்ஷணம்.

பதம்-பதார்த்தம்-வாக்கியயோஜனை-பரீக்ஷை - பரிகாரமெனுமிவை வியாக்கியான பஞ்சலட்சணமாம்.

அந்வயபஞ்சலட்சணம்.

விசேஷணை-விசேஷிய-கர்த்த-கர்ம்ம - கிரியையெனுமிவை அந்வயபஞ்சலட்சணமாம்.

அனுபந்தசதுஷ்டயம்.

விஷயம்-சம்பந்தம்-பிரயோசனம்- அதிகாரமெனுமிவை அனுபந்தசதுஷ்டயமாம், அவற்றுள்-சீவபிர்மைக்கியமே விஷயம். பிரதிபாத்திய பிரதிபாதகபாவகமே சம்பந்தம். சகலதுக்க நிவர்த்தியால் நித்தியானந்தப் பிராப்தியே பிரயோசனம்-சாதனசதுஷ்டய சம்பன்னனே அதிகாரி.

சாதனசதுஷ்டயம்.

நித்தியாநித்திய வஸ்துவிவேகம். இகமுத்திரார்த்த பலபோகவிராகம், சமையாதி சட்கசம்பத்தி-முமுட்சத்துவமெனு நான்குஞ் சாதனசதுஷ்டயமாம், அவற்றுள் சித்ரூபனான ஆத்மனே நித்தியன் மற்றவிஷயமெல்லாம் மித்தையென்றுதெளிவதே நித்தியாநித்தியவஸ்துவிவேகம்.

இகபரங்களில் வனிதாதிவிஷய போகமெல்லாம் கர்ம்மசங்கியமாகையால், அநித்தியமென்றறிவித்து அந்தக்கர்ம்மமார்ச்சிக்கிற ஆதியிலே பிரயாசமும், அனுபவாந்தத்தில் வைராக்கியமு முண்டாகையால் துக்கரூபமென்று தெரிந்து மனதிற்பற்றுகதே இகமுத்திரார்த்தபல போகவிராகம். சமையாதிசட்குணசித்தியே - சட்கசம்பத்தி-சகசசாயு

ச்சிய மோக்ஷாபேட்சையே முமூட்சத்துவமாம். அவற்றுள்-சமையாதி சட்கசம்பத்தியாவது-சமை-தமை-திதிட்சை-உபரதி-சிரத்தை-சமாதியென (௬) அவற்றுள் அந்தக்கரண நிக்கிரகமே - சமை. பாகியகரணநிக்கிரகமே, தமை - குரோதாதி துக்கங்களைப் போக்குறதே திதிட்சை. சகலகர்ம்ம பரித்தியாகமே உபரதி. சுருதியிலும், குருவாக்கியத்திலும் விசுவாசமே சிரத்தை, குருபதேசம் சித்தத்தில் இடங்கொள்ளுவதே சமாதியாம்.

சதுர்வித குருசேவை.

அந்தச் சாதனசதுஷ்டய சம்பன்னனான அதிகாரிசெய்யுஞ் சற்குரு சேவையாவது, ஆப்தம்-அங்கம்-ஸ்தானம்சத்பாவமென்னுமிவை. அவற்றுள் - குருவுக்கு அனுகூலவிர்த்தியே ஆப்தம் குருபாதபிரக்ஷாளனாதியே அங்கம் - குருவின் கிரகக்ஷேத்திராதி ரக்ஷணையே ஸ்தானம். ஸ்ரீகுருவை சாட்சாத்பரமசிவனென்னும் விசுவாசமே சத்பாவமாம்.

அதிகாரத்திரயம்.

கர்ம்மகாண்டி-பக்திகாண்டி-ஞானகாண்டியென வேறே மூன்றதிகாரிகளுண்டு. அவரில் தேககிரக கிருத்தியாதிகளில் கிரமத்தில் யானெனதென்னும், அகந்தையுள்ளவனே கர்ம்மகாண்டி. சகலகிரியைகளையும் ஈச்சுரார்ப்பணஞ் செய்பவனே பக்திகாண்டி. சகலகர்ம்மத்துக்குந்தான் சாட்சியென்பவனே ஞானகாண்டி.

அதிகாரபஞ்சகம்.

கர்ம்மி-முமூட்சு-அப்பியாசி-அனுபவி-ஆரூடனென வேறே ஐந்ததிகாரிகளுண்டு. அவரில் மூட்டத்தனத்தால் தன்சாதிக் கர்ம்மமாத்திரம்பிடித்துச் சதசன்மத்தில் முத்தனாகிறவனே கர்ம்மி-சகம்-அசத்தென்று தெளிந்து ஆத்மகர்ம்மநிஷ்டனாய் மூன்றுசன்மத்தில் முத்தனாகிறவனே முமூட்சு. சொப்பனம்போலப் பிரபஞ்சமித்தையென்று அறிந்து அப்பியந்தரத்தில் தியானாதி கர்ம்மயுக்தனாய், இரண்டுசன்மத்தில முத்தனாகிறவனே அப்பியாசி. விவகாராபேட்சை விட்டு விவேகதத்பரனாகி, ஏகசன்மத்தில் முத்தனாகிறவனே அனுபவி. விஸ்வவிதிர்தி தோன்றாமல் ஆத்மஞானத்தால், சத்தியோமுத்தியடைபவனே ஆரூடன். பின்னுஞ் சகம் மித்தை கைவல்லியம் யாதோவென்னும் விசாரமுகத்தால் ஸ்ரீகுருவையடைந்து தத்வஞானியாய், மோக்ஷம், பெறுமவனு

ருவன். தேகாதிகளநித்தியமென்றறிந்து போகாபேட்சை தோன்றுமல ஸ்ரீகுருவையடைந்து பிர்மஞ்ஞானியாய் முத்திபெறுமவனொருவன். யாதாமொரு ஸ்ரீகுருவானவர் சிஷ்யனுக்கு உபதேசஞ்செய்யுமது கேட்டு, ஆகஸ்மிகத்தால் ஆத்மஞ்ஞானியாய் நிருவாணபதம்பெறுமவனொருவன். இப்படி விவேகவிரக்தி தெய்வகதியாற்பெற்று, முத்தராமவர் வேறே மூவருண்டு.

அஷ்டகுரு.

அந்த ஸ்ரீகுருவே - சாதகரானசிஷ்யருக்கு உபதேசஞ்செய்யும் அதிகாரபேதத்தால, போதககுரு, வேதககுரு, நிசிதகுரு, காமியகுரு, சூசககுரு; வாசககுரு, காரககுரு; விகிதகுருவென அஷ்டப்பிரகாரமாவர் அவர்களில், சாஸ்திரார்த்தம் போதிக்கிறவனேபோதககுரு. தத்துவதரிசகனேவேதககுரு வசியாகருஷ்ணாதிகளால்இகலோகத்திற்சுகமும் பரலோகத்திற் றுக்கமுங்கொடுக்கிறவனே நிசிதகுரு. சுகர்மோபதேசத்தால் பரங்களில்சுகமெய்தப் பண்ணுமவனேகாமியகுரு. விவெகமுகத்தால்சமாதி சட்குணப்பிரதாயகனே சூசககுரு. விஷைய மித்தியாதரிசனத்தால் ஆத்துமானுராகப்பிரதாயகனே வாசககுரு. ஆத்மப் பிர்மயிக்கியஞ்ஞானப் பிரதாயகனே-காரககுரு. சம்சயநிரசனத்துவாரத்தால் நித்தியமுத்திப்பிரதாயகனே. விகிதகுரு.

சிஷ்யன்விதிவதுபசந்நத்துவம்.

இனி அந்தச்சற்குரு சிஷ்யருடையமத்தியில், யாதாமொரு அதிகாரி, தாபத்திரியாக்கினியால்வெதும்பி வியாகுலசித்தனாய், நானோ எனக்கிந்தச் சமுசாரம் எக்காரணத்தால்வந்ததோ, இது யாவர்முகத்தால் நிவிர்க்கியாமோவென்று - விசாரித்துச் சகலபிரபுத்துவமும் விட்டுப், பத்திரபுஷ்பபலாதி சகபாணியாய், வித்தியாவினைய, வைராக்கியாதி சற்குணசம்பன்னரான, ஸ்ரீகுருவையடைந்து,

(சுலோகம்.)

சைதந்யம் சாஸ்விதம்சாந்தம்
வியோமாதீதம் நிரஞ்சனம்,
நாதபிந்துகளாதீதம்
தஸ்மைஸ்ரீகுரவேநமா.

என்று, அஷ்டமந்திரபூர்வகமாய், பதத்துவய, கரத்துவய, புஜத்துவய வக்ஷ, லலாடமென்னும் அஷ்டாங்கமும், நிலத்திற்படப் பிரணதனாய்

ப், பின்னெழுந்து பயபக்தியினாலே. கிங்கரனாயிருந்து கரகமலங்கூப்பித் தனதுகார்ப்பண்ணியமுங் காட்டி, குரு மகிமையுங் கொண்டாடி, ஞான, வைராக்கிய, பல, ஐஸ்வரிய, கீர்த்தி, ஸ்ரீகளென்னும் சட்குண சாமக்கிரியையாற்பகவானாகிய ஓ, சற்குருவே, ஆயாசமில்லாமல் எந்தப்பிரகாரத்தால் எனக்கிந்தப் பவபந்தம் விடுவதென்று, விண்ணப்பஞ்செய்கிறதே சிஷ்யன் விதிவதுமசந்தத்துவமாம்.

ஸ்ரீகுருவினுபதேசம்.

இப்படி உபசன்னனான சிஷ்யனுடைய அதிகாரம் பரீக்ஷித்துக் கிருபாவிலோகனத்தால் வீக்ஷித்து, அஞ்சாதேயென்று, அபயகரஞ் சிரசில் வைத்துச், சுருதியுக்திகளால் அவன்தேகாதி அநாத்துமபுத்தியை நேதித்து, நீயே பரப்பிரமமென்று உள்ளபடி யறிவிப்பதே ஸ்ரீகுருவினுபதேசமாம்.

உபதேசக்கிரமம்.

அந்த உபதேசக் கிரமத்திலே உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷையென்னுமூன்றும், போதப்பிரகாரமாம். அவற்றுள், தானனுசரித் திருக்கிற இஷ்டமானவஸ்துவினுடைய நாமமாத்திரங் கீர்த்திக்கிறதே உத்தேசம். அடிதோலுள்ளது பசுவென்பதுபோல அந்தவஸ்துவினுடைய அசாதாரணதர்மஞ்சொல்லுவதே லக்ஷணம். லட்சிதமானவஸ்துவிற்கு அந்தலட்சணமுண்டோ வில்லையோவென்று பார்ப்பதே பரீட்சை. அந்தவஸ்துசித்திக்கி அஷ்டபிரமாணமுண்டு.

அஷ்டபிரமாணம்.

அவை, பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், அருத்தாபத்தி, உபமானம, அபாவம், சம்பவம், ஐதிகமென்னும் எட்டுமாம். அவற்றுள், கடாதிதரிசினமேபிரத்தியட்சம். தூமத்தால் அக்கினியுண்டென் றறிவதேஅனுமானம். அது பிரதிக்ஞை, ஏது, திருஷ்டாந்தமெனமூன்று விதமாம். அவற்றுள், பர்வதத்தில் அக்கினி யுண்டென்பதே பிரதிக்ஞை. தூமத்தாலென்பதே ஏது. மடைப்பளியைப் போலென்பதேதிருஷ்டாந்தம். யதாதிருஷ்டார்த்தவாதியான ஆப்தவசனத்தால், நதி தீராதிகளில், பலாதிசத்பாவ ஞானமேஆகமம். அர்த்தாபத்தியாவது,திருஷ்டார்த்தாபத்தி, சுதார்த்தாபத்தியென இரண்டாம். அவற்றுள் ப

கூறுவன்றோ தேவதத்தன், தேகபீனத்துவங்கண்டு ராத்திரிபோசனம்பா ண்ணுவனென்றறிகிறதே திருஷ்டார்த்தாபத்தி. தேவதத்தன் கிரகத்தி லில்லையென்றால், அந்நியஸ்தானத்தி லிருப்பனென்றறிவதே சுதார்த் தாபத்தி, பசுவுக்கு தார்க்காணிப்பு மனாயென்னும் வாக்கியத்தைச் சி ரவணத்தில் கேட்டவன், வனமெய்திக்கண்டவனுக்குத் தத் விஷயஞ் ஞானமே உபமானம். கடமில்லையென்றால் கடாபாவ ஞானமே அபா வம். சகஸ்திரசங்கியையில் சதசங்கியா ஞானமே சம்பவம். இந்த வட விருக்ஷத்தில் யக்ஷனிருப்பனென்னும் லோகவார்த்தையால் யக்ஷவிஷ யஞானமேஐதீகம்.

சமையிகள்கொண்டகோட்பாடு.

இந்தப்பிரமாணங்களில் சார்வாகனுக்குப்பிரத்தியட்சம் க-ம். பௌ த்த வைசேடிகருக்கு அனுமானத்தோடு-உ-ம். சாங்கியருக்கு ஆகமத் தோடு-௩-ம். ஜைனருக்கும், நியாயயேகதேசிகளுக்கும்,உபமானத்தோ டு-௪-ம். பிரபாகரர்க்கு அர்த்தாபத்தியோடு ரு-ம். பாட்ட வேதாந்திக ளுக்கு அபாவத்தோடு-சு-ம். புராணீகருக்குச் சம்பவ-ஐதீகங்களோடு எட்டுமாம். இனித்திருக்குதிரிசியமெனப் பதார்த்தத்துவய மூண்டு, அவற்றுள்.

திருக்குவிவேகம்,

திருக்குவினிடத்தில் சுகதபேதம், சஜாதிபேதம், விஜாதிபேதமென நிராகரிக்கத்தக்க பேதத்திரயமூண்டு, அவைகட்குத்திருஷ்டாந்தம், ஒ ருவிருக்ஷத்திற்குப் பத்திரபுஷ்பபலாதிகளே சுகதபேதம். விருக்ஷாந்த ரமே சஜாதிபேதம், பாஷாணாதியே விஜாதிபேதம். திருக்கானசத்ரூப பிரமம் ககனம்போல நிரவயவமாகையாலும், சத்துக்கு வேறுருசத் தில்லாமையாலும், சுகதபேதம், சஜாதிபேதமில்லாதிருந்தாலும், சக த்காரண மாயையுண்டாகையால் விஜாதிபேதமுண்டென்னின், சித்திரி கனேவிட்டுச் சித்திரசத்திக்குவேறே தோன்றுவதில்லாதவெப்படியோ அப்படிச் சின்மாத்திரபிரமத்தைவிட்டு, மாயைக்கு விலட்சணத்துவமி ல்லையாகையால், விஜாதிபேதமில்லையென்பதேநிச்சயம். இந்த அர்த்தத் தில், "ஏகமேவத்துதியமென்னும், பதத்திரயத்துக்கு ஐக்கிய, அவதா ரணே, துவைதநிஷேதமென அர்த்தத்திரய மாகையால், அந்தக்கிரமத் தில், சுகத, சஜாதி, விஜாதிபேதத்திரயமில்லையென்பதேபிரமாணம்.

கற்பிதத்துவயம்.

அத்தியாரோபம், அபவாதமெனக் கற்பிதத்துவயமுண்டு. அவற்றுள், உண்டான ரச்சு, சுத்தி, ஸ்தாணுவாதியில், கிரமத்தில்இல்லாத சர்ப்ப, ரசித, சோராதிகற்பிதம்போலச் சத்ரூபப்பிரமத்தில் இல்லாதமாயாப்பிரபஞ்ச கற்பனையே, அத்தியாரோபமாம், இது சர்ப்பமல்ல ரச்சுவே, இது ரசிதமல்ல சுத்தியே, இதுசோரனல்ல ஸ்தாணுவே யென்பதுபோல விசாரமுகத்தால், இது பிரபஞ்சமல்ல பிரமமென்பதே அபவாதமாம்.

உபாயத்திரயம்.

அதத்துவியா விருத்திலக்ஷணை- தடஸ்தலக்ஷணை-சொரூபலக்ஷணையெனத் திருக்குருபவஸ்து சாக்ஷாத்காரத்துக்கு உபாயத்திரயமுண்டு. அவற்றுள், தேகாதி அநாத்துமவர்க்கங்களை யுத்தியல் நேதித்து, நின்றஆத்மனை அறிவிப்பதே அதத்துவியா விருத்திலக்ஷணையாம். விருக்ஷத்தின்மேலே சந்திரனிருப்பானென்பதுபோலப் பூதாதிசகத்காரணத்திருந்த, ஆத்மனை அறிவிப்பதே தடஸ்தலக்ஷணையாம். பிரகிருஷ்டோஷ்ணப் பிரகாசரூபமே சூரியனென்பதுபோல, ஆத்துமனின்சரூப மறிவிப்பதே சொரூபலக்ஷணையாம்.

ஆத்தும சொரூபலக்ஷண பஞ்சகம்.

சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணமென ஆத்துமாவின் சொரூபலக்ஷணபஞ்சகமுண்டு. அவற்றுள், அறிவேன் அறியேனென் பதிலும், காமாதிவிருத்தி தோன்றுமிடத்திலும், தோன்றா விடத்திலும், சாக்கிராதி அவஸ்தையிலும், தனக்கொருவாதையில்லாம லுண்டென்பதே சத்துரூபமாம். சாவாவஸ்தையிலும் விஷயங்களை இடைவிடாதறிகிறதே சித்துரூபமாம். பரமப்பிரீதியில் விஷயமாவதே ஆனந்த ரூபமாம்,சதோதிதமாவதே நித்தியரூபமாம். சர்வார்த்தசாதகமாகையால், சர்வசம்பந்தத்துவமே பூரணரூபமாம். சச்சிதானந்தமே ஆத்மசொரூபமானால், சத்துஞ்சித்தும்போலச் சர்வபுத்தி விருத்தியிலும், ஆனந்தரூபத்துக்கு அபிவியக்தி யுண்டாகவேண்டும். அஃதில்லாமையால் ஆனந்தம். ஆத்மசொரூபமல்லவென்றால் திருஷ்டாந்தம். உஷ்ணப்பிரகாசமான தீபப்பிரகாசமே கிரகத்தில் வியாபித்திருக்கும் உஷ்ணம்வியாப்தமாகாது. சலத்தில் உஷ்ணமேபிரகாசித்திருக்கும், பிரகாசம்பிரகாசி

தமாகாது. காஷ்டத்தில் உஷ்ணமும், பிரகாசமும், இரண்டும் பிரகடமாயிருக்கும். அப்படியே பிரமத்தின் சத்துபாஷாணாதிகளில், அபிவியக்தியாகிறதல்லாமல் சிதானந்தங்கள் பிரகாசியாது. புத்தியின் தமோகுணத்தால் அஞ்ஞானமயமான மூடவிருத்தியிலும், ரஜோ குணத்தால் ராகமயமான குரோதவிருத்தியிலும், சத்துச்சித்திரண்டும் பிரகாசிக்கிறதல்லாமல், ஆனந்தம் பிரகாசியாது. சத்துவகுணத்தால், வைராக்கியமயமான சாந்தவிருத்தியில், சச்சிதானந்தமென்னும் திருரூபத்துக்கும் ஸ்புரணை காண்பிக்கும். ஆகையாலானந்தம் ஆத்மசொரூபமாம், இந்தப்பஞ்சரூபத்துக்கும் உபாதிபேதமாவது.

சத்துத் திரயம்.

வியாவகாரிகசத்து, பிராதிபாசிகசத்து, பாரமார்த்திகசத்து, எனச் சத்துமூன்றும். அவற்றுள்- சாக்கிரத்தில் கடாதிசத்தே விதேககைவல்லியபரியந்தம் சுழுத்திமூர்ச்சைமுதலான அவஸ்தையிற் றோன்றுமல், எழுந்தபொழுது முன்போலத் தோன்றுகையால், வியாவகாரிகசத்து. சுத்திகாரசித சொப்னவிஷயாதிசத்துத் தோன்றுகிற காலத்தல்லாமல், விழித்தகாலத்தில்லாமையால், பிராதிபாசிகசத்து, சமஸ்தகற்பனைக்கும் அதிஷ்டானமாய்த் தோன்றுதடங்காதிருக்கிற பிரமசத்தே பாரமார்த்திகசத்து.

சித்துசதுஷ்டயம்.

சீவ, ஈச்சுர, கூடஸ்த- பிரமமென்னுநான்கும் சித்துச்சதுஷ்டயமாம். இதற்கு திருஷ்டாந்தம்- சலப்பிரதிபிம்பாகாசம், மேகாகாசம், கடாவச்சின்னாகாசம், மகதாகாசமெனக் கிரமத்தில் திருஷ்டாந்த சதுஷ்டயமாம்.

ஆனந்தாஷ்டகம்.

விஷயானந்தம், பிரமானந்தம், வாசனானந்தம். முக்கியானந்தம், நிசானந்தம், ஆத்மானந்தம், அத்துவைதானந்தம், வித்தியானந்தமென ஆனந்தம் அஷ்டபேதமாம். அவற்றுள், வனிதாதிவிஷயலாபத்திற் றோன்றுவதே விஷயானந்தம். நித்திராகாலத்திற்றோன்றுவதே பிரமானந்தம்- நித்திரைதெளிந்துந் தெளியாவிடத்திற் றோன்றுவதே வாசனானந்தம். ஸ்தானாஸ்தானமில்லாத வுபேக்ஷா புத்தியிற்றோன்றுவதே முக்கியானந்தம். யோகாப்பியாசபலத்தால், மனோலயமானவிடத்திற் றோன்றுவதே நிசானந்தம். பிரியமான வனிதாதி விஷயமத்தியையில் தா

ளே பிரியாத்மகனென்றறிக்கவிடற்றிற் றோன்றுவதே, ஆத்மானந்தம். நாமரூபப்பிரபஞ்ச மெல்லாமித்தை, தானே சத்தியமென்று விவேகத்திற் றோன்றுவதே அத்துவைதானந்தம். தத்வம சியாதிவாக்கிய சந்நியமான அபரோக்ஷஞானத்திற் றோன்றுவதே வித்தியானந்தம்.

அபாவசதுஷ்டயம்.

பிராகபாவம், பிரத்துவம்சாபாவம், அந்நியோந்நியாபாவம், அத்தியந்தாபாவமெனப் பிரமநித்தியபதத்துட்புகாத அபாவசதுஷ்டயம் நான்கு. அவற்றுள் - மிருத்திகைமுதலானதில் கடாதி முன்னில்லாததேபிராகபாவம். உண்டானகடம் பின்னில்லாததே பிரத்துவம்சாபாவம். கடத்திற்படமில்லை, படத்திற்கடமில்லை யென்பதே அந்நியோந்நியாபாவம். ககனகுசுமாதிகமே. அத்தியந்தாபாவமாம்.

பரிச்சேதத்திரயம்.

காலபரிச்சேதம், தேசபரிச்சேதம். வஸ்துபரிச்சேதமெனப் பிரமபூரணபதத்துள் நிராகரிக்கத்தக்க பரிச்சேதத்திரயமுண்டு. அவற்றுள்- ஒருகாலத்துண்டு ஒருகாலத்தில்லையென்பதே காலபரிச்சேதம், ஒருதேசத்துண்டு ஒருதேசத்தில்லையென்பதே தேசபரிச்சேதம். ஒருவஸ்துவாகும் ஒருவஸ்துவல்லவென்பதே வஸ்துபரிச்சேதம்.

சீவநாமரூப விவகாரம்.

பூர்வோக்த சித்துபேதமான சீவ, ஈச்சுராதிகளுக்கு-நாம, ரூப, விவகாரகற்பனையாவது சீவனே- விசுவ, தைஜச- பிராக்கியனென மூன்றும். அவற்றுள்-தூலசரீர வியஷ்டியபிமானி வியாவகாரிகசீவன், புத்திபிரதி பலிதசைதந்நியன், சிதாபாசன், விசேஷரூபன் க்ஷேத்திரஞ்ஞன், சரீரி, பிரமாத்துரு, கர்த்துரு, போக்துரு, சமுசாரி, விஷயி, பாவாத்துமன், விஞ்ஞானமயன், துவம்பதமுக்கியார்த்தன், முதலானவைவிசுவனுக்குப் பரியாயநாமமாம். சூக்ஷமசரீரவியஷ்டியபிமானி, பிரதிபாசிகசீவன், சொப்பனகற்பிதன், முதலானவை தைஜசனுக்குப் பரியாயநாமமாம். காரணசரீர வியஷ்டியபிமானி, அவித்தியோபாதிகன், முதலானவை பிராக்கியனுக்குப் பரியாயநாமமாம்.

ஆத்துமத்திரயம்.

சீவாத்துமா, அந்தராத்துமா, பரமாத்துமாவென ஆத்துமத்திரயமுண்டு, அவற்றுள்-தப்தாய பிண்டம்போலத் தேகங்கட்குள்ளே சம்பந்

நித்துச் சகலசமுசார விவகாரமுள்ளவனே ஜீவாத்துமா. கமலபத்திரோதகம்போலச் சமுசாரம்பொருந்தியும் பொருந்தாதவனே அந்தராத்துமா. லோகவிவகாரத்துக்குச் சாக்ஷிசூரியனெப்படியோ அப்படிச் ஜீவாந்திரவிவகாரசாக்ஷிகனே பரமாத்துமா.

சமுசாரகற்பனை.

சலத்தின்சஞ்சலம், சூரியன்சஞ்சலமென்பதுபோலவும், மேகமோடச்சந்திரனோடுமென்பதுபோலவும், நதியிலே ஓடமோடத்தீரத்தின் விருக்ஷமோடுமென்பதுபோலவும், மனையின்துவாரத்திற் பிரகாசிக்கின்றசூரியகிரணம், கையசைக்கும்போது அசையுமென்பதுபோலவும், தேகத்தின் சனனமரணம் ஆத்துமனுக்கென்பதுபோலவும், நிர்விகாராத்துமனுக்குத், தேகாதியுபாதியாலான அவஸ்தாகற்பனை சமுசார விவகாரமாம்.

ஈச்சுரஸ்வரூபவிவகாரம்.

ஈச்சுரனே-விராட்புருஷன், இரணியகர்ப்பன், அந்தரியாமியென மூவராம், அவருள் தூலசரீர சமஷ்டியபிமானி ஈச்சுரன் தத்பதமுக்கியார்த்தன், முதலானவை விராட்புருஷனுக்குப் பரியாயநாமமாம்.

லிங்கசரீர சமஷ்டியபிமானி, மகாப்பிராணன் - சூத்திராத்மன்-முதலானவை யிரணியகர்ப்பனுக்குப் பரியாயநாமமாம்.

காரணசரீர சமஷ்டியபிமானி, அக்கியானோபயிதசைதந்நியன் - காரணோபாதிகன் - மாயோபாதிகன் - மாயாபாசகன் - மாயாவயவஷி-ஜகத்தியோனி-ஆனந்தமயன் - அக்ஷரன் - அவ்வியாகிருதன்- சபளப்பிரமன்- சகுணப்பிரமன் - பரன்-பரமன்-பரதேவதை - முதலானவை அந்தரியாமிக்குப் பரியாயநாமமாம்.

அந்தஈச்சுரன் தேகதிருஷ்டாந்தம்.

சித்திரபடமானது நாநாவர்ணங்கூடிமுன்னே வெள்ளைப்புடைவையென்றும், மேற்கஞ்சிகூழ் அனுலேபனத்தால் கடிதமென்றும், மேல்நீலமஷிரேகாரத்தாலாஞ்சிதமென்றும், மேலிதயோக்கியவர்ண பூரணத்தால் ரஞ்சிதமென்றும், சொல்லப்படும். அப்படிப் பிர்ம்மமுதல் மாயாதத்காரியாதிதமான தேசித்தென்றும், சர்வகாரணமான மாயோபாதியினால், அந்தரியாமியென்றும், அவ்வியக்தமான சூக்ஷ்மசரீர சமஷ்டியுபாதியினால், சூத்திராத்துமனென்றும், வியக்தமான பஞ்சீகிருத பூதகாரி

யரூப, தூலசரீர சமஷ்டியுபாதியினால், விராட்புருஷனென்றுஞ் சொல்லப்படும். பிர்ம்மத்துக்குச் சித்திரப்படம் திருஷ்டாந்தமானால், அதில் சித்திரம்யாதென்னில், விரிஞ்சனாதி திரணாந்தமான சேதனபிராணிகளும், கிரியாதி அசேதன விஷயங்களுமான சடாசடரூபசகமென்றறி. பாரமார்த்திகமான சித்ரூபமொன்றில், மித்தியாத்மகபகு சேதனாசேதனரூபசகமிருக்கை யெப்படியென்னில் சித்திரபடத்தி லெழுதப்பட்டு நாநாவர்ண பேதமான சீதாதிகளை நிவர்த்திசெய்வதற்கு அசமர்த்தமான வஸ்திராபாசங்களும். சீதாதிகளைப் பரிகாரஞ்செய்கிற சக்தியமான ஆதாரபடமும், ஏகாகாரமாயிருந்தபோதைக்கும், சித்திரபடத்திலிருந்த கிரி, நதியாதிகள் அந்த சித்திராதாரபடத்துடன், சமானமாகாதபடியே சித்ரூபப்பிரமத்தில், வெவ்வேறாகத் தோன்றப்பட்ட சிதாபாச சைதந்நியமான வியாவகாரிகசீவர்கள், சித்துடனே சமானமாய்த்தோற்றினாம், பிருத்திவிமுதலான சடரூபங்கள், சமானமாகாததினாலே சேதனாசேதனமான சகத்து, சித்ரூபப்பிரமத்தில, கற்பிதமென்றே நிச்சயிக்கப்படும்.

ஈச்சுரன் முக்கியகுணம்.

சர்வக்ஞத்துவம், சர்வேச்சுரத்துவம், சர்வநியந்தரத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வகர்த்தத்துவம், சர்வசக்தித்துவாதிகளே ஈச்சுரனுடைய முக்கியகுணமாம்.

ஈச்சுரன்பிரபுத்வ சாமர்த்திய குணத்திரயம்.

கர்த்துருத்துவம், அகர்த்துருத்துவம், அந்நியதாகர்த்துருத்துவமென ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்தியகுணத்திரயமுண்டு.

ஈச்சுரன் பஞ்சகிருத்தியம்.

சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபாவம், அனுக்கிரகமென, ஈச்சுரன் பஞ்சகிருத்தியம் உண்டு ஆனால், நிர்விகாரத்துவிய பிர்மசொரூபனான ஈச்சுரனிடத்தில் சிருஷ்டியாதி வியாபாரவெகு கிருத்தியங்கள் எந்தப்பிரகாரத்தாலாமென்றால், எப்படிச் சூரியன் இச்சாயத்தனமில்லாமல், தன் வருஷகிரணத்தால், விருஷ்டிரூபமான, சலத்தைவிட்டுப், பின்னந்தசலத்திற்றனே பிரதிபிம்பித்து மேகாதிகளால் அதனைமறைத்து, இமகிரணத்தால் அதனைத்தரித்து உஷ்ணகிரணத்தால் அந்த சலத்தைத்திரும்ப வாங்கிக்கொண்டு அந்தப் பிரதிபிம்பத்தைத் தன்னுடனே கூட்டிக்கொள்ளுவன், அப்படியே யீச்சுரனுந் தன் மாயாசத்தியு

னே கூடி சித்துப்பிரதானத்தால், நிமித்தியகாரணனாயும் சடப்பிரதானத்தால், உபாதானகாரணமாயும், புத்தியாதிகாரியங்களைச் சிருஷ்டித்துச் சீவரூபத்தாற்றானே பிரவேசித்துக் கர்மத்தால், போக்துருவென்றும், நியாமகசத்தியால் போக்கியபோக்துருக்களென்றும் நியமித்துருத்திரரூபத்தால் அக்கக்காரியரூபங்களைச் சங்கரித்துப் பின் சுருதிகுருரூபத்தால் அந்தச்சீவனைத் தன்னுடனே யைக்கியஞ்செய்துகொள்ளுவன்.

ரூபத்துவயம்.

வியஷ்டி, சமஷ்டியென சீவ, ஈச்சுரருக்கு வியகார வியாபகத்துவயமுண்டு. அவற்றுள். அநேகவிருக்ஷமுள்ளது ஒருவனமென்றாற்போல, அநேகசீவரெல்லாமையும், தன்னாத்துமனென்னும் அபிமானமே ஈச்சுரனுடைய சமஷ்டிரூபமாம். அந்த வனத்தில் இதுவொருவிருக்ஷம், இதுவொரு விருக்ஷமென்று வெவ்வேறே குறிப்பிடுவதுபோலப் பின்னுபின்ன தேகத்துவாபிமானமே சீவனுடைய வியஷ்டிரூபமாம்.

கூடஸ்தன்பரியாயநாமம்.

விசுவாதி சீவத்திரயாதிஷ்டான சைதந்நியன், துரியன், சுவயஞ்சத்தார்த்தன், சாக்ஷீகன், பாரமார்த்திகசீவன், பிரத்தியகாத்மன், அநுசந்தாத்துரு, அவச்சின்னசீவன், துவம்பதலக்ஷியார்த்தன் முதலானவை கூடஸ்தன் பரியாயநாமமாம்.

பிரமத்தின்பரியாயநாமம்.

அந்தரியாமியாதி, ஈச்சுர திரயாதிஷ்டாத்துரு, பரமாத்துமன், பரதத்துவம், பரப்பிரம்மம், சர்வாதிஷ்டாத்துரு, விசுத்தசித்து, தத்பதலக்ஷியார்த்தன், முதலானவை பிர்ம்மத்தின் பரியாயநாமமாம்.

மிருத்திகையொன்றே நாமரூபத்தால் கடாதிவெகுபேதமானாற்போலவும், சுவர்ண்ணமொன்றேவங்கிசாரம்பத்தால் கடக, மகுடாதியாபரணமானாற்போலவும், சலமொன்றே வாயுவசத்தால், பேன, புற்புத, தரங்காதி சமுதாயமானாற்போலவும், தீபமொன்றே-கடத்தின் துவாரபேதத்தால், வெகுரூபமானாற்போலவும், மாருதமொன்றே வேணுரந்திரத்தால் மந்தர, மத்திம, தாரமானாற்போலவும், சுரமொன்றே -பாடுவான் குறிப்பால் நாநாராகமானாற்போலவும், ககனமொன்றே-கிரகாதியுபாதியால், அநேகமானாற்போலவும், தொனியொன்றே வாத்தியாதிபேதத்தால் அநேகமானாற்போலவும், கதலீதள நீயமொன்றே -கண்ட

த்தால், கரிதுரகாதி நாநாபேதமானாற்போலவும், ரவியொன்றே-சலகும்பாதிவசத்தால், நாநாப்பிரகாரமானாற்போலவும், இலக்கமொன்றே-பிந்துபேதத்தால், தச, சத, சகஸ்திராதியானாற்போலவும், சித்தொன்றே-பூர்வோக்த சீவேச்சுராதி பேதவிகாரமாய்ச்சென்று சொல்லப்படும், இவையெல்லாந் திருக்குவிவேகம்.

திர்சியவிவேகம்.

சந்திரனிடத்தில் அநாதிகளங்கமானது எப்படிச் சந்திரனையாசிரயித்து அவனைமறையாமல் அவனால விளங்குகிற தெப்படியோ அப்படியே நானென்னை அறியேனென்னும் லோகப்பிரசித்த விவகாரத்தால், ஆத்மனையடுத்து அவனைமறையாமல் அவனாலறிவித்துக்கொள்வதாகியும, அக்கினியின்சுடுந்தொழில், மணிமந்திராதி பிரயோகத்தால் பந்திக்கப்பட்டுத்தான் அக்கினிரூபமுமல்லாமல அக்கினியைவிட்டு தோற்றுவதுஞ்செய்யாமல், ஸ்போட காதிகாரியோதய மெப்படியோ அப்படியே பிர்ம்மசொரூபமுமல்லாமல், பிர்ம்ம விலக்ஷணமாயுந் தோன்றாமல் ஆகாசாதிகாரியோதய முண்டாக்குகிறவ ளாகியும் அகடிதகடனா சமர்த்தையாகியும், சர்வதத்துவங்களுக்குங் காரணமானதே திருசியரூப மாயாசத்தி,

---

மாயாலக்ஷணபஞ்சகம்.

அசத்து, சடம், துக்கம், அநித்தியம், கண்டிதமென மாயாலக்ஷண பஞ்சகமுண்டு, அவற்றுள், சசசிருங்கமுதலானவை அசத்துரூபமாம், பாஷாணாதிகளே சடரூபமாம் ரஜ தமோமயமான புத்தியினுடைய குரோதமுடவிருத்தியாதிகமே துக்கரூபமாம் தோன்றிக்கெடுகிற தேகாதிகமே அநித்தியரூபமாம் காலபரிச்சேதாதிகமே, கண்டிதரூபமாம்,

---

மாயாநிர்வாச்சியநவப்பிரகாரம்.

பின்ன, அபின்ன, பின்னாபின்ன, சத்து. அசத்து, சதசத்து, சாவயவ நிரவயவ, சாவயவநிரவயவ, இவை யல்லவென்பதே மாயாநிர்வாச்சிய நவப்பிரகாரமாம்,

அந்த மாயையே - சுருதி சம்பந்த ஞானம், யுத்தி சம்பந்தஞானம், லோகசம்பந்தஞானமென்னும் ஞானத் திரயங்களுடனேகூடி கிரமத்

தில், ககனகுசுமம்போலத்துச்சமென்றும் சுத்திகாரசிதம்போல, அநிர்வாச்சியமென்றும் ஆத்மனைப்போல ஸத்தியமென்றுஞ் சொல்லப்படும்.

மாயாநாமபஞ்சகம்.

தமசு, மாயை, மோகம், அவித்தை, அனுர்தமென மாயாநாமபஞ்சகமுண்டு, அவற்றிற்கு சிவசைதந்நியத்தை மறைக்கையால் தமசென்றும், சகத்ரூபமான தன்னிதரதோற்றத்துக்குக் காரணமாகையால் மாயையென்றும், அப்படித்தோற்றின சகத்தில் சுத்திகாரசிதாதி விபரீதமுண்டாக்கையால் மோகமென்றும், வித்தையினிடமாய்க் கெடுகையால் அவித்தையென்றும், சத்ரூபத்துக்கு அந்நியமாகையால் அனுர்தமென்றும் பெயராம்.

மாயாதர்மத்துவயம்.

சங்கோச விகாசமென மாயாதர்மத்துவயமுண்டு அவையெப்படியெனின், சித்திரபடமானது தன்பிரசாரணையால் நாநாவிதசித்திரங்காண்பித்துச் சங்கோசத்தால் அந்த நாநாசித்திரமுமறையும் அப்படியே மாயை தன்விகாசதர்ம்மத்தால் அகிலப்பிரபஞ்சமுந் தோற்றுவித்துச் சங்கோசதர்ம்மத்தா லடங்கச்செய்யும்.

மாயாகுணத்துவயம்.

அசுவதந்திரம், சுவதந்திரமென மாயாகுணத்துவயமுண்டு. அவற்றுள்- மாயைமித்தையாகையால் சத்ரூப சைதந்நியம்விட்டுத் தானுகத்தோன்றுததே அசுவதந்திரமாம். சாக்ஷிகனுமாய், அசங்கனுமான ஆத்துமாவைச் சீவாதிப்பிரபஞ்சமயமாகப் பண்ணுவிப்பதே சுவதந்திரமாம். மாயைமித்தையென்பது ககனகுசுமம்போலச் சர்வதாசூந்யமல்ல, சொப்பனதேகாதிகம்போலத் தோற்றிவிசாரிக்க இல்லாத மித்தையே மாயையென்றறி.

மாயாவிர்த்தித்திரயம்.

விசுத்தசத்துவரூபமாயை, மலினசத்துவரூபமவித்தை, தமப்பிரதானரூபப்பிரகிருதியென மாயாவிர்த்தித்திரயமுண்டு. அவற்றுள் - மாயைசுழுத்திலயங்களிலே பிர்மத்துடனே அத்தியாச வைக்கியமாயிருந்து, பின் சாக்கிரசிருஷ்டியில் கிஞ்சித்துப் பேதாவஸ்தையாமளவில்

அந்தப் பிர்ம்மசைதந்நியந்தன்னிடத்திற் பிரதிபலித்துத்தானே சர்வக்ஞத்துவாதி குணவிசிஷ்ட சைதந்நியனான ஈச்சுரனென்றும், பதிபதார்த்தமென்றும், பிரேரக விருவென்றுங் கொள்வதினால், அந்த ஈச்சுரனுக்கு உபாதியாகி அமோககாரணியென்றும் சொல்லப்படும். அவித்தைதன்னிடத்திற் பிரதிபிம்பித்து, ஞாதத்வத்தால் போக்தருக்களான பசுபதார்த்த சீவருக்கு உபாதியாகி மோககாரணியென்றும் சொல்லப்படும். பிரகிருதி போக்கியாத்மகத்துவத்தாற் பாசபதார்த்தமென்றும் குணத்திரய சாமான்னியாவஸ்தையால் அந்த அவித்தையிற் பிரதிபிம்பித்த சீவருடையபோகார்த்தமாய்ச், சகலகாரியமு மாகவேண்டி ஈச்சுரன் சந்நிதானலக்ஷண வீக்ஷணமாத்திரத்தால், விரிந்து முதற் காலதத்துவமுண்டாய், மேற்காலவசத்தாற்பரிணமித்து, மகத்தத்துவமாம். அந்தமகத்துவமானது, விதைத்துத்தண்ணீர்வார்க்க அங்குரமுமாகாமல் பீசரியாயமுங்காட்டாமல், உற்பின்னவஸ்தையையடைந்த பீசம்போலக் காரணப்பிரகிருதியுமல்லாமல், காரியகங்காரமுமல்லாமல், மித்தியாக்ஞான நிர்விகற்பசொரூபத்தால், மத்தியாவஸ்தையாம். பின்னும் அந்த மகத்தத்துவத்திற் குணபேதமாய் மித்தியாக்ஞான சவிகற்பசொரூபமான பிரதமாத்தியாசமென்னப்படுகிற மூலாகங்கார முற்பத்தியாம்.

குணத்திரயசிருஷ்டி.

சத்துவ, ரஜ, தமமெனக்குணத்திரயமுண்டு. பிரகாச, பிரவிர்த்தி, மோகமெனக்கிரமத்தில் சத்துவாதிகுணரூபமுண்டு. தைஜசம், வைகாரிகம், பூதாதிகமெனச் சத்துவாதிகுணங்களுக்குப் பரியாயநாமமாம் அவற்றுள்.

சத்துவகுணத்தில்-மனசாதி அந்தக்கரணசதுஷ்டயமும், சுரோத்திராதி ஞானேந்திரியபஞ்சகமுந் தோன்றும்.

ரஜோகுணத்தில்-வாக்காதிகர்ம்மேந் திரியபஞ்சகமும், பிராணாதிவாயுபஞ்சகமும் உதிக்கும்.

தமோகுணத்தில் ஆகாசாதிபூதபஞ்சக முற்பத்தியாம்.

பின் பூதபஞ்சீகரண சம்மேளனத்தால் பிர்ம்மாண்டா புவன சரீர கடாதிவிஷயங்களுண்டாம்.

அந்தமனசாதி அந்தக்கரணத்துக்குக் கிரமத்தில் விஷயங்களை, நினைப்பது, நிச்சயிப்பது, அபிமானிப்பது, அநுசந்திப்பது வியாபாரமாம். இ

தற்குச்சந்திரன், சதுர்முகன், க்ஷேத்திரக்ஞன், திரிபுராந்தகன் அதிதேவதைகளாம். இதயமே கோளகஸ்தானம்.

அந்தச் சுரோத்திராதி ஞானேந்திரியங்களுக்குக் கிரமத்தில், சத்தாதி விஷயங்களைக் கேட்டல், பரிசித்தல், பார்த்தல், ருசித்தல், மணங்கொள்ளுதல், வியர்பாரமாம். இதற்குத் திக்கு, மாருதம், இந்திரன் வருணன், அஸ்வினி அதிதேவதைகளாம். கர்ணாதிகளே கோளகஸ்தானம்.

சுரோத்திராதி ஞானேந்திரியங்களுக்குப்பாகிய சத்தாதிவிஷயங்களையறிகிறதுபோலச், செவியையங்குலியான்மூடப் பிராணவாயு சாடராக்கினியிலுள்ள சத்தக்கிரகணம் அன்னபானேத்சாரமாக, சீதஸ்பரிசக்கிரகணம், நேத்திரத்தைமூட ஆப்பியந்தரதமோருபக்கிரகணம். ஏப்பமாக ஆப்பியந்தரரசக்கிரகணம். வாந்தியாக ஆப்பியந்தரகந்தக்கிரகணம். இப்படி ஆப்பியந்தரசத்தாதி விஷயக்கிரகணமுண்டு.

அந்தவாக்காதி கர்மேந்திரியங்களுக்குக் கிரமத்தில்சொல்லுவது, வசனிப்பது, நடப்பது, பிடிப்பது, விடுவது, ஆனந்திப்பது வியாபாரம். இதற்கு அக்கினி, இந்திரன், ரவி, மிருத்தியு, பிரசேசன் அதிதேவதைகளாம். முகாதிகோளகஸ்தானம்.

அந்தக்கரண ஞானேந்திரிய கர்மேந்திரியமென்னும் பதினான்கும், ஆத்தியாத்மிகமாம். அவற்றின்விஷயமே ஆதிபௌதிகம். அதிதேவதையே ஆதிதெய்விகம் அந்தச் சந்திராதிதேவதைகளே விராட்புருஷன். அவனுடையதே தூலசரீரம். அந்தக்கரணேந்திரியாதிகமே இரணிய கர்ப்பன் சூக்ஷமசரீரம். அந்தச்சரீரமே தமோருபத்தால் அந்தரியாமிக்கு ஆவரணமாம்.

அந்தப்பிராணவாயு இதயஸ்தானத்திலிருந்து, உசுவாச நிசுவாசம் பண்ணும்-

அபானவாயு குதஸ்தானத்திலிருந்து, மலமூத்திரத்தைக் கழிப்பிக்கும்,

சமானவாயு நாபிஸ்தானத்திலிருந்து, உண்ட அன்னசாரத்தைச் சர்வாங்கத்துக்கும் பகுத்துக்கொடுக்கும்.

உதானவாயு கண்டஸ்தானத்திலிருந்து, வாந்தி பண்ணுவிக்கும்,

வியானவாயு சர்வாங்கத்திலுமிருந்து, தேகத்தை நிறுத்திவிக்கும். கிரமத்தில் பிராணவாயுவிற் றோன்றின நாகவாயு மெய்யை முறுக்கிக் கொட்டாவிவிடும், கூர்மவாயு விக்கலெடுப்பிக்கும், கிருகரவாயு தும்மலையுமுண்டாக்கும், தேவதத்தவாயு சிரிக்கும், வசனிக்கும் தனஞ்சய

வாயுதுர்க்கந்தங்களை யெழுப்பிப், பிராணன்போயும் ஐந்துநாளிருந்து தேகத்தை வீங்கச்செய்து தலைவெடிக்கப்பண்ணிப்போம்,

நாகாதிவாயுவைந்தும், பாகியவாயுவென்று சொல்லப்பட்டு,வாக்காதி கர்மேந்திரியங்களைச் சேஷ்டிக்கிறதற்கேதுவாம். பிராணாதிவாயுவைந்தும், ஆப்பியந்தர வாயுவென்று சொல்லப்பட்டுச், சுரோத்திராதி ஞானேந்திரியங்களைச் சேஷ்டிக்கிறதற்கேதுவாம். வைரம்பன், முக்கியன், பிரபஞ்சன், அந்தரியாமியென்னு மிந்நான்குஞ் சீவசம்பந்தவாயுக்களாம் மனசாதியந்தக் கரணங்களைச் சேஷ்டிப்பிக்கும்.

அந்தப்பூமியாதி பஞ்சபூதங்களுக்குக் கிரமத்தில் தாரணை, பிண்டீகரணம், பாகஞ்செய்தல், உலாவல், அவகாசிப்பித்தல் வியாபாரமாம்- இவைகளுக்குப் பிரம்மா-விஷ்ணு-ருத்திரன்- மகேச்சுரன்-சதாசிவன், அதிதேவதைகளாம். கந்தாதியேகுணங்களாம்- அதெப்படியென்னின்- ஆகாசத்துக்குப் பிரிதித்தொனி ரூபமான சத்தகுணம் (௧) வாயுக்குச் சத்த, மனுஷ்ணசீத ஸ்பரிசத்தோடு (௨) அக்கினிக்குச் சத்தஉஷ்ணஸ்பரிசம் - பிரபாரூபத்தோடு (௩) சலத்துக்குச்சத்தம், சீதஸ்பரிசம், சுவேதரூபம், மதுரரசத்தோடு (௪) பூமிக்கு, சத்தம், கடினஸ்பரிசம், நீலாதிவிசித்திரரூபம், மதுராதிநானாரசம், துவிதகந்தத்தோடு-௫.

திரிபுடி.

ஞாதுரு, ஞானம், ஞேயமெனத்திரிபுடியுண்டு. அவற்றுள், மூலாகங்காரத்தில் பிரிதிபலிக்குஞ் சீவசைதந்நியமே ஞாதுரு, மனதிற் பிரிதிபலிக்குஞ்சைதன்னியமே ஞானம். பூதபௌதிகவிஷயங்களில் பிரிதிபலிக்குஞ் சைதன்னியமே ஞேயம், அவற்றுள்.

மனமே-௨௪-ஆம் தத்துவம். மூலாங்காரமே-௨௫-ஆம்தத்துவம். அகங்காரகதசிதாபாசசீவனே, ௨௬-ஆம் தத்துவம் மாயோபாதிகருளா ஈச்சுரனே-௨௭-ஆம்தத்துவம். அகங்காரசீவர்க்கு அதிஷ்டானமான கூடஸ்தனே-௨௮ - ஆம்தத்துவம். அந்தமாயா ஈச்சுரருக்கு அதிஷ்டானமானபிரம்மமே ௨௯-ஆம்தத்துவமாம்,

பிரகிருதிகாரியோதயதுவயம்,

அவை, கிரமசிருஷ்டியென்றும் யுகபத்சிருஷ்டியென்றுமிரண்டு, அவற்றுள்-மூலப்பிரகிருதியில், மகத்தத்துவமும், அகமும், தன்மாத்திரபஞ்சகமுமெனச் சத்தப்பிரகிருதியுண்டு. அவற்றுள், பஞ்சபூதம் அதிற்பிரமாண்டபுவன சரீராதிபிரபஞ்சோதயமே கிரம சிருஷ்டியா

ம். நிஸ்தரங்க சமுத்திரத்தன் ஏககாலத்தில், வாயுவசத்தால் விசித்தி ர, பேன, தரங்க, புற்புதாதிகளுதயமாமேபோலச், சச்சிதானந்த பிரமத்தில் ஏககாலத்தில், மாயாமய நாமரூபப்பிரசாரணையே யுகபத்சிருஷ்டியாம். இந்த இரண்டுபிரகாரமும் சுருதிசித்தமாகையால், அங்கிகாரமாம், அவற்றுள்.

அதிரோகித பிர்ம்மசொரூபமான விகாரமில்லாத ஈச்சுரனால், சடப்பிரகிருதியில், சகலகாரியோதய மெப்படியென்றால், இச்சாதிக மில்லாத சூரியனால் யத்தனாதிகமில்லாத சூரியகாந்தத்தில், அக்கினி ஜெனிக்குமாபோல ஈச்சுரனால், பிரகிருதியில் மகதாதிகாரியோதயத்துக்கு விரோதமில்லை.

மாயாகாரியோதயசதுஷ்டயம்.

விருத்தி, பரிணாமம், ஆரம்பம், விவர்த்தமென மாயாகாரியோதய சதுஷ்டயமுண்டு. அவற்றுள் படகுடாபாவ. க்ஷீரதத்தியாகார தந்துபடதியாயாச்சு சர்ப்பரூபமெனக் கிரமத்தில் திருஷ்டாந்த சதுஷ்டயமுண்டு. சத்ரூபப்பிரமத்தில், மித்தியாவஸ்து கற்பனைக்கு ரச்சுசர்ப்ப ஸ்தாணுசோர, சொப்பனேந்திரசால, கந்தர்வநகர,சுத்திகாரசித, நீலககனை, மரீசிகாசல முதலானவை திருஷ்டாந்தசமூகமாம், நிர்விகாரசொரூபாத்துவயனான ஆத்மனிடத்தில், மித்தியாவஸ்து கற்பிதமானால், அங்கப் பிராந்தியாருக்குத் தோன்றினதென்றால், யாதாமொரு யோகீச்சுரனிடத்தில் சதிரதிகாங்கைக்ஷயென்னுந் திரிவிதரூபங்களும் சொப்பனத்தில் ஏககாலத்திற் றேன்றினும், அதனால் அவனுக்கு யாதொரு ஆனியுமில்லாததுபோலச் சாட்சிகனான- ஆத்மனிடத்திற் குணத்திரயாத்துமகப்பிரகிருதியில் பிராந்திஞாதுரு, பிராந்திஞானம், பிராந்திஞேயமென்னுந் திரிபுடிமயப்பிரபஞ்சம் ஏககாலத்திற் கற்பிதமானாலும் அந்த ஆத்மாவுக்கு யாதொருஆனியுமில்லை.

ஈச்சுரனால் சிருஷ்டியான மாயாமய வியோமாதி பிரபஞ்சமானது, சொரூபத்தில் ஏகப்பிரகாரமாம்.

விஷயத்திரயம்.

அதனிடத்தில் ஜீவபுத்தி கற்பிதமான, போக்கியத்வரூபமே, பிரீதி விஷயம். துவேஷவிஷயம், உபேக்ஷாவிஷயமெனத் திரிவிதமுண்டு- அவற்றுள். வனிதாதிவிஷயமே பிரீதிவிஷயமாம். வியாக்கிராதிவிஷயமே, துவேஷவிஷயமாம். விசித்திரணாதிகமே உபேக்ஷாவிஷயமாம். அந்த

விஷயமொன்றில் ஈச்சுரநிர்ம்மிதமான ஏகாகாரமும், ஜீவகற்பிதமான அநேகாகாரமு மானதற்குத் திருஷ்டாந்தமாம், ஈச்சுரனால நிர்மிதமான ரத்நாதிவஸ்து தானொரு பிரகாரமாயிருக்கும்போதும், போக்துருக்களுடைய புத்தியுத்திகற்பித நானாவிதத்தால ரத்தினந்தன்னைப்பெற்றவர்களுக்குப் பிரீதிவிஷயமாம். அதனைப் பெறாதவர்களுக்குத் துவேஷவிஷயமாம். விரத்தனுக்கு உபேக்ஷாவிஷயமாம். இதனை அபிவியக்தஞ் செய்யவேண்டிவேறுமொரு திருஷ்டாந்தங் காட்டுகின்றார். அஃதியாதெனின்.

ஒருஸ்திரீயின் மாம்சமயமான ரூபம் ஏகப்பிரகாரமாயிருக்க, அந்த ஸ்திரி போக்துருக்களின் புத்தி கற்பிதாகாரத்தால, பிதாவுக்குப் புத்திரியென்றும், பர்த்தாவுக்கு வனிதையென்றும், சுதனுக்கு மாதாவென்றும், வெகுவிதமானாற்போல, சர்வவிஷயமும் இப்படி ஏகாநேகப்பிரகாரமாய் ஈச்சுரநிர்மிதமான, பிரபஞ்சமே பாதகமில்லையாகியும். குருசாஸ்திரரூபத்தால் மோட்சசாதனமாகியும், தன்னால் விடுதற்கு அசக்கியமானதாகையால், அதை அங்ஙனநிறுத்திச ஜீவகற்பித பிரபஞ்சமே அநேகாகாரமானதனால், மோட்சாபேக்ஷிதாராலே நிவிர்த்தி பண்ணுதற்கு யோக்கியமானது.

பிரபஞ்சத்துவயம்.

சாஸ்திரப்பிரபஞ்சம், அசாஸ்திரப்பிரபஞ்சமெனப் பிரபஞ்சத்துவயமுண்டு. அவற்றுள், ஆத்துமப்பிர்ம்மவிசாரமே சாஸ்திரப் பிரபஞ்சமாம் அது ஞானசாதனத்தால் ஆத்துமசாட்சாத்காரமானதற்குமேல்விடத்தக்கது. அசாஸ்திரப்பிரபஞ்சம் - தீவிரமென்றும், மந்தமென்றும் இருவகைப்படும். அவற்றுள், தீவிரப் பிரபஞ்சமாவது காமக்குரோதாதிகமாம். மந்தப்பிரபஞ்சமாவது மனோகற்பித சாதிகர்ம்மாதிகமாம். இந்த அசாஸ்திரப்பிரபஞ்சம் ஆத்மசாட்சாத்காரத்துக்குவிரோதமாகையால், ஞானப்பியாசத்துக்கு முன்னே விடத்தக்கது. இந்த உபயபிரபஞ்சமும், ஆத்மசாட்சாத்கார மானதற்குமேல் மோக்ஷ சித்தியாய் சர்வதாவிடத்தக்கதென்பதே ரகசியார்த்தமாம்.

உபாதித்திரயம்.

அவச்சின்னோபாதி, பிரதிபிம்போபாதி, அத்தியாசோபாதியென உபாதித்திரயமுண்டு. அவற்றுள், பிரத்தியகாத்துமனுக்குச் சுழுத்தி

ஞபாவிர்த்தைகயே அவச்சின்னோபாதியாம். தற்காரியமானபுத்தியில் அந்த ஆத்துமன் பிரதிபலித்திருப்பதே பிரதிபிம்போபாதியாம். அந்தப் புத்திகதமாய்ச் சுகதுக்காதிகளை அந்த ஆத்துமன் புசிக்கிறுப்போலிருக்கிறதே அத்தியாசோபாதியாம்.

அத்தியாசசதுஷ்டயம்.

அதுவல்லாததை அதுவென்னும் புத்தியே சுக்திகாரசிதத்திருஷ்டாந்த ராத்தியாசலட்சணம். அந்த அத்தியாசமே மித்தியாத்தியாசம், இதராத்தியாசம், இதரேதராத்தியாசம், சத்தியாத்தியாசமெனச் சதுர்விதமாம். அவை அக்கினிசம்பந்தத்தாற் சலத்துக்கு உஷ்ணமாவதுபோலப் பிரத்தியெகாத்துமன் சந்நிதியிற்கிரமத்தில், நடமாடுவன, பார்ப்பன, நினைப்பன, அறிவன சத்திகளுண்டாகிய தூலசரீரமே மித்தியாத்தியாசம். இந்திரியவர்க்கமே யிதராத்தியாசம். அந்தக்கரணமேயிதரெதராத்தியாசம். மூல வாங்காரமே சத்தியாத்தியாசம். அகமென்பதிற் பிரத்தியெகாத்துமாகங்காரமே ரச்சுசர்ப்பமென்னுமாப்போல, நிருபாதிகாத்தியாசம். அகங்கர்த்தாவென்பதில் படிகமணிக்கொத்த அகங்காரதர்ம்மாத்துமருக்கே சோபாதிகாத்தியாசம். இச் சாம்மியகமென்பதில், அந்தக்கரண தர்ம்மாத்துமருக்கே, பிரவாகசலபதங்கப் பிரதிபிம்பம்போலத் தத்தர்ம்மாத்தியாசம். குடும்பாத்மருக்கே யகமென்பதில் புத்திரகளத்திராதிகளுக்கே ஓடத்திலிருந்த விவகாரம் போலச் சம்பந்தமாத்திராத்தியாசம். இந்த அத்தியாசத்தால், நிர்விகாரனான ஆத்மனுக்கே சமுசாரகற்பனையாம்.

பஞ்சாவஸ்தை.

சாக்கிர, சொப்பன, சுழுத்தி, துரியம், துரியாதீதமெனப் பஞ்சாவஸ்தைகளுண்டு அவற்றுள், பஞ்சபூத, கமேந்திரிய, பிராணாதிவாயுபஞ்சக, அந்தக்கரண சதுஷ்டயமென்னுஞ் சதுர்விம்சதி தத்துவாத்துமகமான, தூல சரீரத்தில், சத்துவகுண, அகாராக்ஷரவிஷ்ணு அதிதேவதை, லோசனஸ்தானம்.

இதயகமல அஷ்டதளகத விசுவசீவனும், விராட்சகிதனான ஈச்சுரனும் ஏகமாய் வனிதாதி சமஸ்தவிஷயபோகமுஞ் சகல காணசாமக்கிரியையால் அனுபவிப்பதே சாக்கிராவஸ்தை.

அந்த - ௨௪ - தத்துவத்தில் - தூலபூதம் - ௫ - சித்தமும்அங்காரமு

மாகிய - (உ)ம். நீக்கிநின்ற - மன - தத்துவமும், சூக்ஷமதனுவில்ராஜோ குண உகாராக்ஷர பிர்ம்மன் அதிதேவதை, கண்டஸ்தானம்.

இதயகமல கர்ணிகாதி தைஜசசீவனும், சூத்திராத்தும சகிதனான ஈச்சுரனும் ஏகமாய்ச் சாக்கிரவாசனாபோகத்தை மனமென்னுங் கரணத்தால் அனுபவிப்பதே சொப்பனாவஸ்தை.

பறந்துமேயப்பட்ட குஞ்சுகளெல்லாவற்றையுந் தன்பக்ஷத்துள் அடக்கிக்கொண்டு, நித்திரைசெய்யும் பதாயுதபக்ஷியைப்போலச், சமஸ்தகாரியமும் உட்கொண்டு தற்சமஸ்காரசகிதமாய், ஆத்மாசிரயத்தில் நிரவஸ்தையா யிருக்கப்பட்ட பிரகிருதிரூபமான காரணதேகத்தில் தமோகுண மகராக்ஷரருத்திரன் அதிதேவதை, இதயஸ் தானம் தத்கமலகர்ணி காக்கிரமத்தியகதி பிராக்கியசீவனும், அந்தரியாமி சகிதனான ஈச்சுரனும் ஏகமாய்ப் பிர்ம்மானந்த விஷயபோகத்தை மாயாவிருத்தியென்னுஞ் சூக்ஷமகரணத்தால் அனுபவிப்பதே சுழுத்தியவஸ்தை.

இந்தச் சாக்கிராதி அவஸ்தைக்கு அவஸ்தாத்திரயம், காமத்திரயம் புரத்திரயம், ஸ்தானத்திரயமெனப் பரியாயநாமங்களுண்டு.

அந்தச் சாக்கிரத்தில் தற்கமலமழிந்து, மனோவியாபாரமழிந்து, பரமாத்தும சிந்தனைசெய்வதே துரியாவஸ்தை.

அந்தத் துரியாவஸ்தையில், ஆத்தும னிடத்தில் மனோலக்கினமா யிருப்பதே துரியாதீதா வஸ்தை இந்த அவஸ்தைகளில், ஸ்தாவரங்களுக்குச் சுழுத்தியும், பக்ஷிகளுக்குச் சொப்பனசுழுத்தி யிரண்டும், தேவர்களுக்குச் சாக்கிரமும், மனிதருக்கு அவஸ்தாத் திரயமும், உன்மத்தருக்குத் துரியமும் யோகிகளுக்குத் துரியாதீதமுமாம், அவற்றுள் முதன்மூன்றவஸ்தையும் மனிதருக்குத் தன்னிலிருந்துதானே தோன்றிச் சமுசாரகத்துவமாம். மற்றைய விரண்டவஸ்தையும், யோகாப்பியாசபலத்தால் பின்னும், மோக்ஷசாதனமா யிருக்கும். அந்த அவஸ்தைகளொன்றினி லொன்றில்லாமையாலும், காலதேசாதி நியமத்தில் தோன்றுவதில்லாமையாலும், மித்தியாபூதமாம். அவற்றுள், அனுசூதமா யிடைவிடாதிருக்கிற நிசதுரியனான ஆத்மனே சத்தியனும், அந்தச்சாக்கிர சொப்பனங்களில், அறிவுண்டென்பது பிரசித்தம். சுழுத்தியிலறிவுண்டென்பதற்கு எழுந்திருந்தகாலத்தில், நானொன்றுமறியாமல் நித்திரைபண்ணினேன். சுகத்திலே நித்திரைபண்ணினேனென்றுசொல்ல என்னகாரணத்தா லில்லையெனின், ஒருவஸ்துவை எடுப்பதற்குக்கூடத்தில் நுழைந்தவனுக்கு அந்த வஸ்து உண்டில்லை யென்பதை யங்கிருந்துவெளியேபுறப்பட்டாலல்லது சொல்லுவதற்குக்கூடாததெப்படி.

யோ. அப்படிச் சுழுத்தியில் அறிவுண் டானாலும், காலகர்ம்ம சமீரண வசத்தால் எழுந்திருந்து கரணசககாரியாலல்லது தானறிந்துசொல் வதற்குக்கூடாது, ஆகையால் சர்வாவஸ்தைக்குஞ் சாட்சிகளான ஆத்ம னுக்கே சச்சிதானந்த சுவயம்பிரகாசரூபத்துவம் அனுபவசித்தம்.

கோசபஞ்சகம்.

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தம யமெனப் பஞ்சகோசமுண்டு. அவற்றுள்-பிதா, மாதா, சுக்கிலசோ ணிதத்தாலான தூலசரீரமே அன்னமயகோசமாம். சூட்சமதனுவில், பிராணவாயு, கர்ம்மேந்திரியங்கள்கூடிப் பிராணமயகோசமாம். மன மும், ஞானேந்திரியமுங்கூடி மனோமயகோசமாம், பிரத்தியெ காத்ம சைதந்நிய சாயையுடனேகூடி, லோகாந்த குந்தம்போலிருந்த அகங் காரமும், ஞானேந்திரியங்களுங்கூடி விஞ்ஞானமயகோசமாம். காரண தேகரூபமான அவித்தையும், சாக்கிரத்தில் வனிதாதி விஷயதரிசனசா மீப்பிய சம்போகங்களால், கிரமத்திலுண்டான பிரியம்,மோதம், பிர மோதமென்னுந் திரிவிதமுங்கூடி ஆனந்தமயகோசமாம். விஞ்ஞானம ய கோசரூபமான அகங்காரமே, ஆத்மாவென்பர். அறிவில்லா ராகிய விவேகருனியர். அகமென்னுந் தம்மனுபவத்தால் ஆத்துமா வென்று ஞ்சொல்லுவர். அதற்கு நீலோற்பலமென்னுமிடத்தில் நீலகுணவிசே ஷணத்துடனே விசேஷியமானவுற்பலமும், வேத்திய மாவதுபோலத் தேகோகமென்னுமிடத்தில், தூலதனுவினுடனேகூடிச் சுரோதாகமெ ன்னுமிடத்தில் இந்திரியங்களுடனேகூடி, ஞாதாக மென்னுமிடத்தில், அந்தக் கரணங்களுடனேகூடி, பிரத்தியெகாத்துமனுக்கு வேத்தியமா ம், அதனால் அகங்காரமாத்துமாவல்ல. ஆனால், அசேதனகங்காரத்து க்குப் பாகியாப்பியந்தர விஷயங்களை யறிவதெப்படியென்னின், காந் தக்கல்லின் சந்நிதானத்தில், ஊசிசேஷ்டிக்கிறதுபோலவும், வெய்யலி லேபிடித்த கண்ணாடியினுள் மனையிருள் வெளியாவதுபோலவும், பிர த்தியெகாத்துமன் சந்நிதானத்தில், சைதந்நியபிரதிபிம்பந் தன்னிடத் திலிருக்கையால் அந்தச் சடமானவகங்காரமேயாகிய விஷயத்தி லறிவு டனேகூடிச் சாக்கிரசொப்பனத்தில், சஞ்சரித்துச் சுழுத்தியில் அடங் கும் மற்றப்பிரபஞ்சத்துக்குஉபமானம். அகங்காரலயாவஸ்தாத்மகமா ன, சுழுத்தியுள் அவித்தையென்னும், உண்மனைச் சுவனாயும், நித்தி ரையென்னுங் கபாடத்தையும், நிஷ்களரூபமான தன்னையுந்தானேபிர காசித்திருப்பதே பிரத்தியெகாத்தும சோதியெனப்படும். பின்காலக

ர்ம்மசமீரணப் பிரோகத்துவத்தால், தாமசமானநித்திராகபாடந் திறக்
கப் பின் அந்த அவித்தையின் பிரதமாவஸ்தாத்மக தத்துவமென்னும்
வாசற்படியிலிருந்த சாத்துவிகமான அகங்காரமென்னும் படிகமணி
அந்தப் பிரத்தியெகாத்மப் பிரதீபப் பிரதிபிம்பகற்பிதமாய், முன்போ
லச் சீவனெனபித்துக்கொண்டு சொப்பனமான, நடுமனையும் விளக்கி,
பின் இந்திரியங்களெனனும், கவாட்சிவாசல்களாற் புறப்பட்டுச்சாக்கி
ராவஸ்தையான பாகியமுற்றத்தையும், பிரகாசிப்பிக்கும். பின்காலகர்
ம்மசமீரணப்பிரோகத்துவத்தால், நித்திராகபாட மூடினவுடனே, அந்
த அகங்காரமென்னும் படிகமணி தனக்குக் காரணமான அவித்தையு
ளடங்கலால் சாக்கிர, சொப்பனமென்னும், பாகியமுற்ற நடுமனை யிர
ண்டும் அந்தகாரமயமாய் அந்த அகங்காரமணியிற் பிரதிபலித்திருந்த,
சித்திப்பிரகாசந் தனக்கு மூலபூதமான பிரத்தியெகாத்மப் பிரதீப
த்தில் ஐக்கியமாம்,

இப்படிச்சாக்கிராதி அவஸ்தாத்திரயங்களில், அகங்காரத்தின் பா
வாபாவங்களை, அவிகாரனாய் அறியுமாத்துமனொருவன் வேறே யிருக்
கையில் அகம் ஆத்துமனல்லவென்பதே சித்தம்.

பாகியவிஷயத்துக்கு ஆத்துமனாய், பிரத்தியெகாத்துமனுக்கு வேத்
தியமாகையால், சடாசடருபம் தர்ப்பணத்தின்பின்புறம், முன் புறமு
ம்போலப் பிரகாசாப் பிரகாசாத்துமகமான, அகங்காரத்துக்குத் தேக
ம். சிற்சாயாப் பிரத்தியெகாத்துமகனென்னும் இந்த மூன்றினுடனே
சம்பந்தமுண்டு. அவற்றுள்.

அகமாத்துமாவென்பதனால், சிற்பிரதிபிம்பயுக்தமான, அகங்காரச
ம்பந்தத்தால், தூலதேகத்துக்கும் உஷ்ணாதிகளை யறிகிறதே கர்ம்மசாசி
தமாகிய கர்ம்மசமெனப்படும். அகஞ்சானுமியென்பதனுவ் சிற் சாயா
வகங்கார சம்பந்தமே சிருஷ்டிதொடங்கி, மோட்சபரியந்தங் கெடா
தாகையால், சகசமெனப்படும் அகங்கரோமியென்பதனால் அசங்கனு
ன பிரதியெ காத்துமாகாங்காரசம்பந்தமே, பிராந்திசங்கிய மெனப்படு
டும். இவைமுதலானவெல்லாம் திர்சியவிவேகம்.

சீவசப்தாவஸ்தை.

அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷஞானம், அபரோ
க்ஷஞானம், சோகநிர்த்தி, நிரங்குசதிர்ப்பதியெனச் சீவசப்தாவஸ்தை
யுண்டு, அவற்றுள் சமுசாரசகத்திரணனுடைய சிதாபாசசீவன் சுருதிவி

சாரத்துக்குமுன் தன்னிஜரூபமான சுவயம்பிரகாச பிரத்தியெகாத்து மனை அறியாதிருப்பதே அஞ்ஞானமாம் பின் ஒவ்வொருவேளைசிதாத் மப் பிரசங்கம் வந்தவிடத்தில் பிரத்தியெகாத்தும னில்லை, அவனிருந் தால் தோன்றுமே யென்னும் இந்தவுபயவிதசந்தேகமே அந்த அஞ் ஞானகாரியமான ஆவரணமாம் பின்தானேகர்மகர்த்துரு தானே கர் ம்மபலபோக்துருவென்று எண்ணுவதேவிக்ஷேபமாம் பின், ஆத்தும ன் அஸ்தித்துவஞ்சொல்லுகிற சுருதி குருவாக்கிய வசத்தால பிரத்தி யெகாத்துமன் உண்டென்று தெளிவதே முதலாவது சத்தாவரண நி வர்த்தகமானபரோக்ஷஞானமாம்பின்நீயே பிர்ம்மமென்று சொல்லும் வேதவாக்கிய விசாரப் பிரவாக வசத்தால், பிரத்தியெகாத்துமன் நா னென்றறிவதே இரண்டாவ தாகிய பானுவரண நிவர்த்தகமான அப ரோக்ஷஞானமாம் பிரத்தியெகாத்துமன் சாக்ஷாத்காரமானதற்குமேல் நான் கர்ம்மகர்த்துரு கர்ம்பலபோக்துருவென்னுஞ் சுவயரூப துக்கப ரித்தியாகமே சோகநிவர்த்தியாம் செய்யத்தக்க கிருத்திய மெல்லாஞ் செய்யப்பட்டது எய்தத்தக்க பலமெல்லாம் எய்தப்பட்டதென்னுஞ் சுகசம்பிரிதுஷ்டியுண்டாயிருப்பதே நிரங்குசதிர்ப்தியாம்.

சோகநிவர்த்தி நிரங்குசதிர்ப்தியென்னும், இரண் டவஸ்தையும் அ பரோக்ஷ ஞானபலமாம், சுயம்பிரகாச சித்ரூபனான ஆத்மனுக்கு நித் தியாபரோக்ஷத்துவ முண்டென்கையால், அவனுள் அஞ்ஞானாதி சத் தாவஸ்தைகூட அறியாததோ வென்றால், திருஷ்டாந்தம் தச புருஷ ரொன்றுக்கூடி நதியைக்கடந்து போய்த் தம்மைப்பாரமரிக்குஞ் சம யத்தில், அவரில் நவசங்கியா புருஷரை யெதிரிட் டெண்ணித் திரிவா ரொருபுருஷன் தன்னைத் தசமனென்றறியாததே அஞ்ஞானமாம் பின்பு தசமனில்லை அவனிருந்தால் தோன்றுமே யென்னும் உபயப்பிராந்தி யே அஞ்ஞானகாரியமான ஆவரணமாம் பின்தசமன்நதியின் மிருதனா னனென்பதே விக்ஷேபம் பின்வேறொரு ஆப்தவசனத்தால் தசமனே சுவர்க்கம்போலுண்டென்றறிவதே அந்தத் தசமனில்லையென்னு முத ல் ஆவரணத்துக்கு விரோதியான பரோக்ஷஞானமாம் பின்னவசங்கி யா புருஷனுடனே கூட்டிக் கிரமத்தி லெண்ணி நீயேதசமனென்று தெளிவிக்கத்தானே தன்னை சாக்ஷாத்காரமாகஅறிவதேதசமன்றோன் றுமேயென்கின்ற இரண்டாமா வரணத்துக்கு விரோதியான அபரோ க்ஷஞானமாம் பின்தசமன்மிருத துக்கம்விடுவதே சோகநிவர்த்தியாம் பின்னிசஸ்திதியா யிருப்பதே நிரங்குசதிர்ப்தி.

வேதவாக்கியத்திரயம்.

விதிவாக்கியம், நிஷேதவாக்கியம், சித்தார்த்தபோதவாக்கியமெனத் திரிவிதமுண்டு. அவற்றுள் யக்கியாதிசெய்ய வேண்டுமென்பதே விதிவாக்கியமாம். சுராபானாதி செய்யக்கூடாதென்பதே நிஷேத வாக்கியமாம். விதிநிஷேதசூனியமாய் பிர்மாத்தும வைக்கியவஸ்துருபயாத்திரம்போதிப்பதே சித்தார்த்தபோதவாக்கியமாம்.

மகாவாக்கியம்.

அந்தச்சித்தார்த்த போதவாக்கியம், இருக்கு, எசுர், சாம, அதர்வணமென்னும் நான்குவேதங்களிலும், கிரமத்தில், பிரதிபாதிக்கப்பட்ட, (பிரக்கியானப்பிர்மம்,) (அகம்பிரமாஸ்மி,) (தத்துவமசி,) (அயமாத்துமாபிர்ம்மமெனு,) நான்கு மகாவாக்கியமுண்டு, அவற்றுள், முக்கியமானதத்துவம் சிமகாவாக்கியத்துக்கு தத்துவம் அசியெனப்பதத்திரயமுண்டு. அவற்றிற்கு, பிர்ம்ம, ஆத்தும, ஐக்கமென்று கிரமத்தில் பதத்திரயார்த்தமுண்டு, பின்னபதபதார்த்த வாக்கியங்களுக்குச் சாமானாதிகரணசம்பந்தம். விசேஷண விசேஷ்யசம்பந்தம், லட்சிய லக்ஷணசம்பந்தமெனக் கிரமத்தில் சம்மந்தத்திரயமுண்டு. பதபதார்த்தங்களுக்கு வாச்சியார்த்தம், லட்சியார்த்தமென அர்த்தத் துவயமுண்டு, அவற்றுள், பூர்வோக்த நூலாதிதனுத்திரயமுண்டு சமஷ்டிருபரான விராட்புருஷன், இரணியகர்ப்பன், அந்தரியாமியென்னும் ஈச்சுரர்களும், பிர்ம்மமுங்கூடி தப்தாயபிண்டம்போல ஏகாகாரமாகக்காண்பதே தத்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும் முக்கியார்த்தமென்றும், அபிதார்த்தமென்றுஞ் சொல்லப்படும். தனுத்திரய வியஷ்டிருபரான விசுவ- தைஜச- பிராக்கியசீவருபமும், பிரத்தியெகாத்துமனுங்கூடி தப்தாய பிண்டம்போல ஏகாகாரமாகக் காண்பதே துவம்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும் முக்கியார்த்தமென்றும், அபிதார்த்தமென்றுஞ் சொல்லப்படும்.

விராட்புருஷாதிகளை வேறுபடுத்தின நிருபாதிகபிர்ம்மமே தத்பதத்துக்கு லட்சியார்த்தமென்றும் சோதித சுத்த தத்பதார்த்தமென்றும், சொல்லப்படும்.

விசுவாதிகளை வேறுபடுத்தின நிருபாதிகப் பிரத்தியெ காத்துமமே துவம்பதத்துக்கு லட்சியார்த்தமென்றும், சோதித சுத்த துவம் பதார்த்தமென்றுஞ் சொல்லப்படும்.

சாரத்துக்குமுன் தன்னிஜரூபமான சுவயம்பிரகாச பிரத்தியெகாத்துமனை அறியாதிருப்பதே அஞ்ஞானமாம் பின் ஒவ்வொருவேளைசிதாத்மப் பிரசங்கம் வந்தவிடத்தில் பிரத்தியெகாத்துமா வில்லை, அவனிருந்தால் தோன்றுமே வென்னும் இந்தவுபயவிதசந்தேகமே அந்த அஞ்ஞானகாரியமான ஆவரணமாம் பின்தானேகர்மகத்துரு தானே கர்ம்மபலபோக்துருவென்று எண்ணுவதேவிக்ஷேபமாம் பின், ஆத்துமன் அஸ்தித்துவஞ்சொல்லுகிற சுருதி குருவாக்கிய வசத்தால பிரத்தியெகாத்துமன் உண்டென்று தெளிவதே முதலாவது சத்தாவரண நிவர்த்தகமானபரோக்ஷஞானமாம்பின்நீயே பிர்ம்மமென்று சொல்லும் வேதவாக்கிய விசாரப் பிரவாக வசத்தால், பிரத்தியெகாத்துமன் நானென்றறிவதே இரண்டாவதாகிய பானுவரண நிவர்த்தகமான அபரோக்ஷஞானமாம் பிரத்தியெகாத்துமன் சாக்ஷாத்காரமானதற்குமேல் நான் கர்ம்மகர்த்துரு கர்ம்பலபோக்துருவென்னுஞ் சுவரூப துக்கபரித்தியாகமே சோகநிவர்த்தியாம் செய்யத்தக்க கிருத்திய மெல்லாஞ் செய்யப்பட்டது எய்தத்தக்க பலமெல்லாம் எய்தப்பட்டதென்னுஞ் சுகசம்பூரி துஷ்டியுண்டாயிருப்பதே நிரங்குசதிர்ப்தியாம்.

சோகநிவர்த்தி நிரங்குசதிர்ப்தியென்னும், இரண் டவஸ்தையும் அபரோக்ஷ ஞானபலமாம், சுயம்பிரகாச சித்ரூபனான ஆத்மனுக்கு நித்தியாபரோக்ஷத்துவ முண்டென்கையால், அவனுஞ் அஞ்ஞானாதி சத்தாவஸ்தைகூட அறியாததோ வென்றால், திருஷ்டாந்தம்-தச புருஷரொன்றுக்கூடி நதியைக்கடந்து போய்த் தம்மைப்பராமரிக்குஞ் சமயத்தில், அவரில் நவசங்கியா புருஷரை யெதிரிட் டெண்ணித் திரிவானொருபுருஷன் தன்னைத் தசமனென்றறியாததே அஞ்ஞானமாம் பின்பு தசமனில்லை அவனிருந்தால் தோன்றுமே வென்னும் உபயப்பிராந்தியே அஞ்ஞானகாரியமான ஆவரணமாம் பின்தசமன்நதியின் மிருதனுனானென்பதே விக்ஷேபம் பின்வேறொரு ஆப்தவசனத்தால் தசமனை சுவர்க்கம்போலுண்டென்றறிவதே அந்தத் தசமனில்லையென்னு முதல் ஆவரணத்துக்கு விரோதியான பரோக்ஷஞானமாம் பின்னவசங்கியா புருஷனுடனே கூட்டிக் கிரமத்தி லெண்ணி நீயேதசமனென்று தெளிவிக்கத்தானே தன்னை சாக்ஷாத்காரமாக அறிவதேதசமன்றோன்றுமென்கின்ற இரண்டாமா வரணத்துக்கு விரோதியான அபரோக்ஷஞானமாம் பின்தசமன்மிருத துக்கம்விடுவதே சோகநிவர்த்தியாம் பின்வளிசஸ்திதியா யிருப்பதே நிரங்குசதிர்ப்தி.

வேதவாக்கியத்திரயம்.

விதிவாக்கியம், நிஷேதவாக்கியம், சித்தார்த்தபோதவாக்கியமெனத் திரிவிதமுண்டு. அவற்றுள் யக்கியாதிசெய்ய வேண்டுமென்பதே விதிவாக்கியமாம். சுராபானாதி செய்யக்கூடாதென்பதே நிஷேத வாக்கியமாம். விதிநிஷேதசூனியமாய் பிர்ம்மாத்தும வைக்கியவஸ்துருபமாத்திரம்போதிப்பதே சித்தார்த்தபோதவாக்கியமாம்.

மகாவாக்கியம்.

அந்தச்சித்தார்த்த போதவாக்கியம், இருக்கு, எசுர், சாமம், அதர்வணமென்னும் நான்குவேதங்களினும், கிரமத்தில், பிரதிபாதிக்கப்பட்ட, (பிரக்கியானப்பிர்மம்,) (அகம்பிரமாஸ்மி,) (தத்துவம்சி,) (அயமாத்துமாபிர்ம்மமெனு,) நான்கு மகாவாக்கியமுண்டு, அவற்றுள், முக்கியமானதத்துவம் சிமகாவாக்கியத்துக்கு தத்துவம் அசியெனப்பதத்திரயமுண்டு. அவற்றிற்கு, பிர்ம்ம, ஆத்தும. ஐக்கமென்று கிரமத்தில் பதத்திரயார்த்தமுண்டு, பின்னபதபதார்த்த வாக்கியங்களுக்குச் சாமானாதிகரணசம்பந்தம். விசேஷண விசேஷ்யசம்பந்தம், லட்சிய லக்ஷணசம்பந்தமெனக் கிரமத்தில் சம்மந்தத்திரயமுண்டு. பதபதார்த்தங்களுக்கு வாச்சியார்த்தம், லட்சியார்த்தமென அர்த்தத் துவயமுண்டு, அவற்றுள், பூர்வோக்த தூலாதிதனுத்திரயமுண்டு சமஷ்டிருபரான விராட்புருஷன், இரணியகர்ப்பன், அந்தரியாமியென்னும் ஈச்சுரர்களும், பிர்ம்மமுங்கூடி தப்தாயபிண்டம்போல ஏகாகாரமாகக்காண்பதே தத்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும் முக்கியார்த்தமென்றும், அபிதார்த்தமென்றுஞ் சொல்லப்படும். தனுத்திரய வியஷ்டிருபரான விசுவ- தைஜச- பிராக்கியசிவருபமும், பிரத்தியெகாத்துமனுங்கூடி தப்தாய பிண்டம்போல ஏகாகாரமாகக் காண்பதே துவம்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும் முக்கியார்த்தமென்றும், அபிதார்த்தமென்றுஞ் சொல்லப்படும்.

விராட்புருஷாதிகளை வேறுபடுத்தின நிருபாதிகபிர்ம்மமே தத்பதத்துக்கு லட்சியார்த்தமென்றும் சோதித சுத்த தத்பதார்த்தமென்றும், சொல்லப்படும்.

விசுவாதிகளை வேறுபடுத்தின நிருபாதிகப் பிரத்தியெ காத்துமனே துவம்பதமதுக்கு லட்சியார்த்தமென்றும், சோதித சுத்த துவம் பதார்த்தமென்றுஞ் சொல்லப்படும்.

அந்த லட்சணவாக்கியமாவது - சகர்லட்சணை- அசகர்லக்ஷணை- சக்தசகர்லக்ஷணை யெனத்திரிவிதமுண்டு, அவத்திற்குக் கங்காயாம கோஷப் பிரதிவசதி. குந்தாப் பிரவசந்தி சோயந்தேவதத்தகா எனக்கிரமத்திலுதாகரணத் திரயமுண்டு. அவற்றுள்.

கங்காயாம் கோஷப்பிரதிவசதிக்கு, அர்த்தம் - கங்காசத்தம் பிரவாசுரூபமான தன்முக்கியார்த்தகோஷம் இடைச்சேரிக்காசிரய மாகாமையால், அதைவிட்டு அகன்தீரத்தைப்பற்றும். இதுஜகர்லக்ஷணை.

குந்தாப்பிரவசந்திக்கு அர்த்தம் - குந்தசப்தம்தன் முக்கியார்த்தத்தை விடாமல், குந்ததாரிகளைப்பற்றும். இது அஜகர்லக்ஷணை.

சோயந்தேவதத்தகா என்றது சகாவென்னுஞ் சப்தம் பூதகாலதேச வயோவிசிஷ்டனை, தேவதத்தனைச்சொல்லும், அயமென்னும் சப்தம் வர்த்தமானகாலதேச வயோவிசிஷ்டனை தேவதத்தனைச் சொல்லும், இந்தவுபய விரோததர்ம்மமுள்ள, பதார்த்தங்களுக்கு ஐக்கியங்கூடாமையால், அந்தவுபயபதார்த்தத்தி லுள்ள விரோததர்ம் மாங்கிசம் விட்டு அவிரோத தர்ம்மாங்கிசமான தேவதத்தனை மாத்திரமே அங்கிகரிக்கப் பின் அவனேயிவன் இவனேயவனென் றிப்படித் தாதாத்மியமாமென்று இப்படிச் சொல்லுவதே ஜகதஜகர்லக்ஷணை யென்றும், அர்த்தலக்ஷணை யென்றும் பாகத்தியாகலக்ஷணை யென்றும், பரியாயநாமமுள்ளதாய், அசியென்னும் பதத்துக்கு, உதாகரணமாய், இதுவொன்றே சொல்லுதற்கு யோக்கியமாம், அதெப்படியென்றால், தத்தென்னும்பதம், வாச்சியார்த்தமான, சர்வஞ்ஞயத்துவாதி குணவிசிஷ்டனை பரோக்ஷஞனாகச்சுரனையே சொல்லும் துவம்என்னும்பதம் வாச்சியார்த்தமான கிஞ்சத்துவாதி எனகுணவிசிஷ்டனை அபரோக்ஷஞனை சிதாபாசசீவனையேசொல்லும் இந்தவுபய விரோததர்ம்மமுள்ளபதார்த்தங்களுக்குஏகத்துவங்கூடாமையால், அசியென்னும்பதம்அந்த வுபயபதார்த்தகதபரோக்ஷத்துவ, அபரோக்ஷத்துவாதி விரோததர்ம்மமாங்கிசம்விட்டு, அவிரோத தர்ம்மாங்கிசமாகிய சைதந்திய மாத்திரமானலக்ஷியார்த்தமாகிய பிர்ம்ம, கூடஸ்தனை யங்கிகரிக்க அதுவேயிது இதுவேயது வென்றிப்படித் தாதாத்மியகஞ் சொல்லும் பின் அந்த வுபயலக்ஷியார்த்தங்களில் பரோக்ஷத்துவ அபரோக்ஷத்துவாதிகளை, அவித்தியா கற்பிதமென்று போதிப்பதே சபலமாய ஆத்துமா அகண்டாகாசபோதமாத்திரசித்தே யென்பது வாக்கியார்த்தம்.

சுருதியுக்தவாக்கியம்.

தத் துவமசிவாக்கியத்தால் பிரத்தியெகாத்மபரமாத்துமருக்கு ஏகத்துவமாகையால், கடாதிவுபாதிசேதித்து, ஆகாசமொன்றென்பது போலவும், ராமச்சந்திரனை மனுஷத்துவம் விடுவித்து, நீயேவிஷ்ணுவென்பதுபோலவும், கர்ன்னனை வியாதபாவம் விடுவித்து, நீயே குந்திபுத்திர னென்பதுபோலவும், தசமன்மாணதுக்கம் விடுவித்து நீயே தசமனென்பதுபோலவும், சுவாபசித்தார்த்த மல்லாமல் ஒருபுருஷனுக்கே சுவர்க்கமுண்டென்னும் வாக்கியம்போல அபேக்ஷை யுண்டாக்குகிற அர்த்த வாதமென்றும், பிரதிமை தேவதா ரூபமென்னும் வாக்கியம்போல உபாசனுபரமென்றும், மனுஷனைத்தேவேந்திரனென்னும் வாக்கியம்போல ஸ்துதிபரமென்றும், ஆனையரச னென்னும் வாக்கியம்போல உபசாரமென்றும், அக்கினி மாணவகனென்னும் வாக்கியம்போலக் குணசாதிரிசியமென்றும், இது கோவின்தேகமென்னும் வாக்கியம்போலச் சாதிவியக்திபரமென்றும், கடம் மிருத்திகைக்கு அனந்நியமென்னும் வாக்கியம்போலக் காரியகாரணமென்றும், நீலோற்பலமென்னும் வாக்கியம்போலக் குணகுணித்துவமென்றும். க்ஷீரந்ததிக்குப் பேதமென்னும் வாக்கியம்போல விகாரமென்றும், வாரிகணங்களுக் கேகமென்னும் வாக்கியம்போல அங்கிசாங்கிசமென்றும், பிம்பப்பிரதிபிம்பங்களுக்கு ஐக்கியமென்னும் வாக்கியம்போலப் பிம்பப்பிரதிபிம்பவாதமென்றும், வெகுவிதத்தால் இப்படிப்பேதபரமாய் விகற்பித்துச்சொல்வது சுருதிவிரோதமாம்.

முத்திசம்சயநிரசனம்.

சகல பிரபஞ்சத்துக்கும் மித்தையாதலுவஞ்சொல்லும். வேதாந்த பட்சத்துள், சுருதிவிசாரத்தால் சத்தியமான முத்தியெப்படியாமென்னில, பிராந்தியானசொப்பன வனிதா சம்போகத்தில் சத்தியமாகவீரியம்விடுவதுபோலவும், சிலாகற்பிதபைரவாதி தேவதாசேவையில், சத்தியமானசம்பத்தாதி சித்திபோலவும், யதார்த்தமல்லாத தர்ப்பணப்பிரதிபிம்பாதிகளிற், சத்தியமானமுகலாவண்ணியாதி திர்ஷ்டமாவது போலவும், பிரபஞ்சத்தில் மகசுருதிவிசாரத்தால் பரமார்த்தமானமுத்திசித்தம்.

முத்திவிக்னத்திரயம்.

அஞ்ஞானம், சமுசயம், விபரீதமெனமுத்திவிக்னத்திரயமுண்டு. அவற்றுள் நான்பிர்ம்மமல்ல வென்பதே, அஞ்ஞானம். நான் பிர்ம்மமா

மோ அல்லவோவென்பதே சம்சயம். நான் பிர்ம்மமானாலும் சுருதியுத்தியால்முன் சீவபாவமெனக்கிருக்கின்ற தென்கிறதே விபரீதம்.

அஞ்ஞானாதிகளுக்கு விரோதத்திரயம்.

சிரவண, மனன, நிதித்தியாசனமெனக் கிரமத்தில் அந்த அஞ்ஞானாதிகளுக்கு விரோதித்திரயமுண்டு. அவற்றுள் சுருதிவிசாரத்தால்சூதகாதிகளில் திடபுத்தியாவதெப்படியோ, அப்படிப் பிரத்தியெகாத்துமப்பிர்ம்மைக்கியமென்னும் உபநிஷத்துவாக்கியத்தால், சத்தவிதலிங்கதாற்பரியம் அவதரிப்பதே சிரவணம், அந்தச்சுருதி அர்த்தத்தையுத்தியாதிகளால், சிந்தனைசெய்வதே மனனம். அந்தநிச்சயமான அர்த்தத்திற் சித்தம் நிச்சலமாயிருப்பதே நிதித்தியாசனம். அவற்றுள்.

சிரவணத்தி லுற்பன்னமானஞானத்தால் ஆத்துமசாட்சாத் காரமாகையால் சிரவணமே முக்கியாங்கமனன, நிதித்தியாசனம், அதற்குச் சககாரிகளாகையால் முக்கியமல்ல. பாக்கியமான திருஷ்டாந்தம் அந்தப்பிரகாசமான தீபத்தின், சஞ்சலாவஸ்தையில், காரியசாமர்த்தியமில்லாமையால், வாயுசஞ்சாரத்துக்கு மறைவு கடுவதுபோல. மனனம அதனுடைய திரியைத்தூண்டிப் பிரச்சுவலிதஞ் செய்வதுபோல, நிதித்தியாசனம்.

சத்தவிதலிங்கதாற்பரியம்.

உபக்கிரம், உபசங்காரம், அப்பியாசம். அபூர்வதைபலம், பூதார்த்தவாதம், திருஷ்டாந்தமெனச் சத்தவிதலிங்கதாற்பரியமுண்டு. அவற்றுள் சிருஷ்டிக்குமுன் சகத்து சத்ரூபப்பிர்ம்மமே யாயிற்றென்றுபின்னந்தப் பிர்மத்துக்குச் சுவகதாதிபேதத்திரயம் நேதித்து அகண்டாகாசத்தைச்சொல்லுவதே, உபக்கிரமம், நாமரூபாத்மகசகத்தை அந்தப் பிர்ம்மத்திலே லயஞ்செய்து பிரத்தியெகாத்துமனுக்கு அந்தப் பிர்ம்மத்துடனே ஏகத்துவம்போதித்து, அந்தப்பிர்ம்மம், அத்துவைதமென்றுசொலவதே, உபசங்காரம், உபக்கிரமம், உபசங்காரமென்னுமிரண்டுங்கூடி யொருலிங்கமாகும். பிரத்தியெகாத்துமனே. பிர்ம்மமென்று மறுத்துஞ்சொல்வதே அப்பியாசம். அந்தப்பிரத்தியெகாத்மனுககுப், பிரத்தியக்ஷாதி பிரமாணாதீதத்துவங்களைச் சொல்வதே அபூர்வதை அந்தப்பிரத்தியெகாத்மனொருவனை யறியப்படுகையால், சகலமும் அறியப்பட்டதென்று சொல்வதேபலம். பிரத்தியெகாத்துமரூப நிர்விகாரபிர்ம்மத்துக்குச் சிருட்டியாதி சகத்துச்சிந்தனையென்னு நியாயமு

ண்டாகையால், சகத்து சிருஷ்டியாதி அனுக்கிரகாந்தமான பஞ்சகிர்த்திய கர்த்திருத்துவஞ்சொல்வதே பூதார்த்தவாதம். கடத்துக்குமிர்த்திகை தந்துவுக்கு வூர்ணநாபிநிமித்தம்போலச், சகத்துக்குக்காரணம்பிர்ம்மமென்றுசொல்வதே திருஷ்டாந்தம்.

மனனசகாயத்திரயம்.

யுக்தி, தர்க்க, அனுமானமென மனனத்துக்குச் சகாயத்திரயமுண்டு. அவற்றுள் ஆத்துமா அநேகராய் வியாபகரொன்னும், சாங்கியாதிபதத்துள், அந்தச்சமஸ்தாத்துமருக்கும் பிரத்தியேக சரீரங்களில் சம்மந்தமுண்டாகையால், இவனுக்கே யிந்தச்சரீரம் போகசாதனம். அந்நியருக்காகாதென்று போகஸ்திதிசொல்லக்கூடாது. இவன் சுகிர்தாதிகளால் தேடப்பட்டதாகையால் இந்தச்சரீரமிவனுக்கே, அந்நியருக்கில்லையென்னின் சுகிர்தாதிகமுஞ் சர்வ்வருக்குமுண்டு. இவன் பூர்வதேகாபிமானத்தால், செய்யப்பட்ட சுகிர்தாதிகம் இவனதேயென்னில், அந்தஅபிமானமும் பூர்வதேகத்திலிருந்த அநேகாத்துமருக்கு முண்டென்றிப்படிச் சர்வசாங்கரியமான அனவஸ்தாதூஷணம் நிராகரிக்கிறதற்கு அசக்கியம். அதெப்படியென்றால், சர்வாத்துமரா யிருப்பாராகில், பின்னேகாத்துமபட்சத்தில் போகவிவஸ்தையாகாதென்று, நாநாபட்சமாசரித்தாலும், போகவிவஸ்தைகூடாது. ஆகையால் ஏகாத்துமபட்சத்தில் பிம்பப்பிரிதி பிம்பநியாயத்தால், உபாதிகளான அந்தக்கரணத்தினுடைய ஸ்தம்பகாலுஷ்யாதி நாநாத்துவதசையால், விசித்திர போகஸ்திதி சொல்பமென்பதேயுத்தி. தர்க்க அனுமான லக்ஷணம். அருஷ்மிசிராசாரியாதிகளால், கண்டனாதிகளில் பிரசித்தம் - இது சுகானுபவப்பிரகரணமாகையால், கிரந்தம் வெகுவாமென்னும்பீதியால் பிரதிபாதிக்கப்பட்டதில்லை,

---

நிதித்தியாசனயோகபஞ்சகம்.

மந்திரயோகம், ஸ்பரிசயோகம், பாவயோகம், அபாவயோகம். மகாயோகமென நிதித்தியாசனரூப யோகபஞ்சகமுண்டு. அவற்றுள், பிரணவாதி மந்திரானுசந்தானத்தாற் பரமாத்துமனிடத்தில் மனோலயமாவதே மந்திரயோகம், அந்த மந்திரயோகசகிதமாய் மனோபவனங்களொன்றாய், மூலாதாரத்திலிருந்து சுழிமுனைநாடி மார்க்கத்துள்ளேறிச், சிரோமத்தியகத பரமாத்துமதேசசினுள், அந்த மனோலயமாவதே ஸ்பரிசயோகம். சுவர்க்கமேமூர்த்தா, திக்குகளேசுரோத்திரம். சந்திர

சூரியனே நேத்திரம் அக்கினியேமுகம். அந்தரிக்ஷமேநாபி. பூமியே பாதமான ஈச்சுரனுடைய விராட்புருஷரூபத்தைத் தியானித்துப்பின்னும் அபரிமித சகஸ்திராபரணசகிதமான ஈச்சுரனுடைய திவ்விய மூர்த்தியைத்தியானித்துப், பின்னந்த அவயவங்களை ஒன்றொன்றாய் விட்டுவின்ற அவயவிமாத்திரமான, சத்ரூபப்பிர்ம்மத்தில், மனோலய மாவதே ஸவயோகம். கானகோசரமாகாத பிர்ம்மாண்டத்துக்கு, அதீதமானநிருபாதிக பிர்ம்மத்தில் மனோலயமாவதே அபாவயோகம். சதோதயலயத்திலும், அறியேன் அறிவேனென்பதிலும் தனக்கொருஆனியு மில்லாமல் ஒரேபிரகாரமான பிரத்தியகாத்துமப்பிர்ம்மத்தில் மனோலயமாவதே மகாயோகம்,

பிரதிபந்தத்திரயம்.

பூதப்பிரதிபந்தம். வர்த்தமானப்பிரதிபந்தம். ஆகாமியப் பிரதிபந்தமென ஆத்துமசாக்ஷாத் காரத்துக்குவிரோதித்திரயமுண்டு, அவற்றுள், மோட்சாபேக்ஷையால் சர்வசங்கபரித்தியாகம்பண்ணி, ஸ்ரீ குருவையடைந்து சிரவணாதிகஞ் செய்தாலும், முதல் கிரகஸ்தாசிரமத்தில் போகித்திருந்த வனிதாதிவஸ்துக்களை ரூபயௌவன சிங்காராதி சற்குணங்க ளனுபவித்தவை சமஸ்காரபலத்தால் வந்து வந்து உனக்குச்சுகதுக்கத்தை அடிக்கடிகொடுத்துச் சிந்திப்பித்து, ஆத்துமனைச்சாட்சாத்காரமாக வொட்டாததே பூதப்பிரதிபந்தம். சடபுத்தி ஜன சங்கதி விஷயாசக்திக்கு தர்க்காபிமான சபலதநுவாதிகள் தத்துவ விசாரஞ் செய்தாலும், ஆத்மனைச் சாட்சாத்காரமாக வொட்டாததே வர்த்தமானப்பிரதிபந்தம். உனக்குச்சிலசனனம் வந்தாலல்லது பிராப்தவிஷயந்திரமென்கிற புத்தியோடு, பிர்ம்மலோகவாஞ்சையென்கிற தோஷத்துவயுக்தனாயிருந்து, வேதாந்தமறிந்தாலும் ஆத்துமனைச்சாக்ஷாத்காரமாகவொட்டாததே ஆகாமியப்பிரதிபந்தம்.

அவதித்திரயம்.

அந்தப்பிரதிபந்தங் கெடுவதற்குக் காரணமாக ஞான வைராக்கியஉபரதியென்னும், முக்கியசாதனங்களை இடைவிடாதப்பியாசஞ் செய்கிறதற்குக் காரண சொரூப காரியமென்று மூன்று லட்சணங்களைக்கிரமத்தில் வெவ்வேறாகச்சொல்லும். அதெப்படியென்றால், ஞானத்துக்குச்சிரவணமே காரணம், ஆத்துமாகங்காரத்தினுடைய அத்தியாசவைக்கியம் வேறுசெய்வதேசொரூபம்.

அகங்காரகதசம்சாரஸூகத்துவமேகாரியம், வைராக்கியத்துக்கு வி
ஷிகாதிவிஷயங்களில் அநித்தியத்துவாதி தோஷதரிசனமே காரணம்
மேல் எந்தப்பிரகாரத்தி லாகிலும். அகங்காரம்விடுவதேசொரூபம் அ
ந்த விஷயங்களில் புகாததேகாரியம், உபரதிக்கு, இயம நியமாதி, அஷ்
டாங்கயோகமே காரணம் மனோ நிச்சலசித்தியே சொரூபம், மனோம
க்கினமா யிருப்பதே காரியம்.

தேகாத்துமபாவந்திடமானது போலப்பிரம்மமே தானென்னுந்திட
புத்தியே, ஞானவதி பிரம்மலோகாதி திரிணிகரமே, வைராக்கியாவதி
சுழுத்தினைப்போலச் சகல காரியவிஸ்மரணமே உபரதியவதி அந்த ஞான
வைராக்கியோ பரதிமூன்றுஞ் சித்தித்தால் அவனுக்கு மகாதபசின்ப
லமாம், அவற்றுள் ஞானமின்றி வைராக்கியம் உபரதியிரண்டும் சம்பூ
ரண மாகிலும், அவனுக்குமுத்திகூடாது மகாசுகஸ்தானமான, பிரம
மலோகப்பிராப்தியாம், ஞான மொன்றிருந்து வைராக்கியம் உபரதியி
ல்லாதவனுக்கும், மரத்துநுனிமூறிந்தால், அதன்மேலிருந்தவனுக்குப்
பதனமிச்சையில்லை யாயினும், பதனம், சுபாவம், அதுபோலத் தேகா
ந்தத்தில் முத்திசித்தம் அதுவனாக்கும், பிராரத்தசனித சுகதுக்கானு
பவமுண்டென்பது சித்தம்,

ஞானபூமிசப்தகம்.

சுபேச்சை, சவிசாரணை, தனுமானசி. சத்துவாபத்தி, சமுசத்தி, ப
தார்த்தாபாவனை, துரியகாமியெனச்சப்தஞான பூமியுண்டும் அவற்று
ள் நான்மூடனா யிருக்கக் காரணமென்ன, ஸ்ரீகுருவினா லறியவேண்டு
மென்பதேசுபேச்சை, மேல் குருசாஸ்திராதியாற் சனித்தகிஞ்சித் ஞா
னபலத்தால், சதாசாரபிரவிர்த்தியேவிசாரணை. மேல் சுபேச்சைவிசா
ரணையின்பலத்தால், விஷயாசத்தைகெடுவதேதனுமானசி. மேல்அந்த
ப் பூமி காத்திரயாப்பியாசபலத்தால், சாக்கிரப் பிரபஞ்ச மெல்லாம்
சொப்பனமென்று கண்டு ஆத்மாவினுடைய சின்மாத்திரானுசந்தான
மே சத்துவாபத்தி மேல் சகல பிரபஞ்சமும் தோற்றுதலடங்கிச்,சுழு
த்தினைப்போலாத்மசின் மாத்திரானந்த்துவமேசமுசத்தி மேல் சர்வ
வாசனைபலத்தால் காடநித்திரையடைந்தவன் போலானந்தாத்மனிடத்
திலயமாவதேபதார்த்தாபாவனை. மேல் உண்டென்றாது இல்லையென்
றாது அகங்கிருதி. நிரங்கிருதி. தோற்றுததே கேவலம். ஞெப்திருபமா
ன அத்துவைத பதத்தில் வெளியில் வெறுங்கடம்போல உள்ளும்புற
மும் சூனியமாயிருப்பதே துரியகாமி.

சட்சமாதி.

அந்தவுபாதிக்கனுசாரிகளான கிரியானுவித்த, சத்தானுவித்த, நிர்விகற்பமெனப்பாஃகியாப்பியந்தரங்க பேதத்தால் சட்சமாதிகளுண்டு அவற்றுள் கடாதிவிஷயசமூகத்துள், ஒன்றனைக்குறித்து அதனுடைய நாமரூபமான மாயாங்கிசங்க ளிரண்டையும் பிரித்து அதனுள் அஸ்திபாதிப்பிரியமென்னும் சச்சிதானந்தப் பிரம்மாங்கிசத்திரயங்களை, அநுசந்தானஞ்செய்வதே பாகியகிரியானுவித்தசவிகற்பசமாதி அகண்ட சச்சிதானந்தாத்துவிதிய சொரூபம் பிரம்மமென்று தியானிப்பதே பாஃகியசத்தானுவித்த சவிகற்பசமாதி. இந்தச் சமாதிதுவயாப்பியாசபலத்தால் பிரம்மானந்தஸ்தானத்தில், மனோமக்கினமாய் நிஸ்தரங்க சமுத்திரம்போல நிச்சலாத்துமகமா யிருப்பதே பாகிய நிர்விகற்பசமாதி, மனோகதகாமசங்கற்பாதிகளே திர்சியம் நானிதற்கு சாக்ஷிகளென்னும் அனுசந்தானமே அப்பியந்தரதிர்சியானுவித்த சவிகற்பசமாதி அசங்கசச்சிதானந்த சுவயம்பிரகாசமே நானென்று சிந்தனைசெய்வதே அப்பியந்தரசத்தானுவித்த சவிகற்பசமாதி அந்தச்சுவானுபூதிக்காவேசத்தால் திரிசியசப்தமிரண்டும்விட்டு, நிவாததீபம்போல நிச்சிந்தரூபமா யிருப்பதே அப்பியந்தர நிர்விகற்ப சமாதி இந்தச் சட்வித சமாதிகளினின்று கழித்த யோகிச்சுரன்மனம் எங்கெங்கே சஞ்சரிந்ததோ வங்கங்கே சமாதியாம்.

ஞானபலசதுஷ்டயம்.

துக்காபாவ, சர்வ்வகாமாப்தி கிருதகிருத்தியத்துவம், பிராப்த, பிராப்பியத்துவமென ஞானபல சதுஷ்டய முண்டு அவற்றுள் துக்காபாவம் இகபர லோக பேதத்தால் துவிதமாம் அவற்றுள் தூலசரீரத்தில் வியாதிதுர்க்கந்தத்துவகுரூபத்துவாதிகளும், சூக்ஷமதனுவில் காமக்குரோதாதிகளும், காரணதேகத்தில் அந்தவியாதியாதிகளுக்குப் பீசபூதமான சமஸ்காரங்களென்னும் திரிவிதசந்தாபமே, இகலோகதுக்கம். மித்தியாத்மக மாயாகாரியமான தூலசரீராதிகளைவேறு செய்விக்கப்பட்ட அத்துவிதியனை பிரத்தியெகாத்தும ஞானத்தின்மேலே பரமார்த்தமான போக்கியபோக்திருக்க ளில்லாமையால், அந்தத்துக்கத்திரய சம்பந்தமில்லாதிருப்பதே, இகலோக துக்காபாவம், சுகிர்தமெப்படிவருமோ, துஷ்கிருத மெப்படிபோமோ வென்னு மிந்தச்சிந்தனையே பரலோகதுக்கம், சம்மியஞானனந்தரம்- கமல பத்ரோதகம்போல அந்தக்கர்ம்மத்துவயங்கூடுவதில்லை. எப்படியென்னின் காஷ்டத்தி

ல் நெருப்பிருக்கும். அந்நெருப்பில் காஷ்டமிராகதுபோலக் கர்மத்துவயவிவகாரத்தில் விவேகியிருப்பன். அவனுள் அந்தகர்மத்துவயவிவகாரமிலலாமையாலும், தாவானலம் பொருந்தப்பட்ட பர்வதத்தை ஒரு பட்சிமிருகங்களும் சேராததுபோல ஞானாக்கினி சொரூபனை அச்சுகிர்தாதிகள் பொருந்தாமையாலும், அந்தசிந்தனைதோன்றாதிருப்பதே பரலோகதுக்காபாவம். சர்வைச்சுவரிய சம்பன்னனான சார்வபௌமாதி யிரணியகர்ப்பாந்தம் உத்தரோத்தரமாயிருக்கத்தக்க சதகுணோத்தரானந்தங்களெல்லாம் நிவர்த்தனான விவேகிக்குண்டாயினும், அந்த வாநந்தங்களெல்லாம், பிர்ம்மாங்கிசங்களாய் அகண்டாநந்தம் சித்திக்கையால், அதுவே சர்வகாமாப்தி அந்தவிவேகிக்குத் தத்துவஞானமாகிறதற்கு முன் இகலோக சம்பந்தமான இஷ்டப்பிராப்தி அநிஷ்டநிவர்த்திப் பொருட்டாகக் கிருஷிவாணிச்சியாதிகளும், சுவர்க்காதிசித்திப்பொருட்டாக யாகோபாசனாதிகளும், மோக்ஷ சாதனஞானசித்திப்பொருட்டாகச் சிரவணாதிகளுமென்னும் திரிவித கர்த்தவ்வியமாயிருக்கும். இந்தத் தத்வஞானமானபின் சமுசார இகபோக இச்சையில்லாமையால், கிருஷிமுதலான வியாபாரமுமில்லை. கவாட்சிகக சூரியகிரணத்தில், காண்பிக்கிற பரமாணுக்கள், வெளியிலிருக்கிற பிரகாசத்திற் காண்பியாததுபோல, அஞ்ஞானிக்கு விஷயமான கர்மமெல்லாம், சம்மியக்ஞான மத்தியையில் தோன்றாமையால், யாகோபாசனாதிகளும், அனுஷ்டிக்கத்தக்க தில்லையாய்ப், பிர்ம்மாநந்த சாக்ஷாத்காரமாகையால் சிரவணாதிகமெல்லாம் கிருதப்பிராயமாம். இதுவே கிருதகிருத்தியத்துவம், தனக்கு விசிஷ்டபுண்ணிய பரிபாக முமுக்ஷுத்துவ குருபாத சாஸ்திரசிரவண ஆத்துமாநாத்துமவிவேக அஞ்ஞானநிவர்த்தி, ஆத்தும சக்ஷாத்கார சமுசாரதுக்கநிவிர்த்தி, நிசானந்தாதி சித்திகளே பிராப்தப் பிராப்பியத்துவம்.

வித்தியாத்துவயம்.

சீவன்முக்தி, விதேககைவல்லியமென, வித்தியாத்துவயமுண்டு, அவற்றுள் விவேகிக்கும் அகமாத்துமருக்கும், அந்நியோந்நிய சம்பந்தலக்ஷணம், சமானமாயிருந்தாலும், விவேகிக்கு இதயகிரந்தியெல்லாம், சிதைந்தமையால், பரசரீர மெப்படியோ, அப்படியே சுவயசரீரத்திற்கூட அபிமானமில்லை, பிராரத்தபோகம் அனுபவ சாம்மிய மாகையால், சாக்ஷாத்காரமற்ற பாலாதிகள்போல. மந்தாறு சந்தானத்தால், போகாபிமானமுமாய்க் கடமுட்பத்தியானதற்குமேல்குலாலன் சக்கரம்பி

ரமிக்குமாபோலப் பிராரத்த வாசனுபலத்தால், சஞ்சரிக்கிறதே சீவன் முத்தி.

பிர்ம்மஞ்ஞானோதயமானபின், சூரியோதயத்தால், இருள் கெடுவது போல, ஞானத்தால அஞ்ஞானகாரியமான சரீராதிகளழிந்து, விதேககைவல்லியமாகாமல், மத்தியையில், சீவன்முத்திகற்பனை யெப்படியென்னில், விவேகத்தால் ரச்சுசர்ப்பப்பிராந்திகெட்டாலும், தற்காரியமான பயகம்பிதமிருப்பதுபோல, ஞானத்தால, அஞ்ஞான மழிந்தாலும் தற்காரியமான சரீராதிகளுக்கு ஸ்திதியுண்டாமாகையால் பிர்ம்மவித்தியோற்பத்தி சமகாலத்தில்நிஸ்சேஷமாய், அஞ்ஞானத்துடன்கூடின தேகபதனமானாலல்லது, பிர்ம்மவித்தியாசம்பிரதாயம் விச்சித்தியாம். ஆயினப்படியாயிற் றென்னையாயின், ஈச்சுரனால் பிர்ம்மன்பிர்ம்மனால் பிரசாபதி பிரசாபதியால், மநு-மநுவால், சகலருமறிந்தாரென்று பிர்ம்மவித்தியாசம்பிரதாயஞ் சொலலுகிற சாந்தோக்கியசுருதிக்குவிரோதமாம். ஆயினும, அஞ்ஞானிக்குச் சீவன்முத்தி சித்திக்கும்பொருட்டாய்ப் பிராரத்தகர்ம்மவாசனைஞ் ஞானலேசசத்பாவம் அங்கிகரிப்பதனால், தேகஸ்திதியும், சிஷ்யோபதேசாதிகளும், சித்தித்திருக்கும் சீவன்முத்தனுக்குச் சஞ்சிதகர்ம்ம ஞானக்கினியால் சுவல்பப்புல்லுப்போலத் தகனப்படும். பிராரத்தகர்ம்மம் புசித்துத்தொலையும், ஆகாமியகர்ம்மம், அநாதிகாரியமாகையால், பலியாதென்று அனுமியிக்கப்படும். ஞானக்கினியால் தகனமான சஞ்சிதகர்ம்மமே பிராரத்தபோக மீவதனால். முன்னுக்குத் தேகோற்பத்திசெய்யுமெனில், வறுத்தகடலைமுதலானது புசிக்கிறதற்குமாத்திரம் உபயோகமாவதல்லது அங்குரோற்பத்திக்குக் காரணமாகாததுபோல, ஞானக்கினியால் தகனப்பட்டகர்ம்மம் பிராரத்தபோகத்துடனே நிருவதல்லது, சன்மாந்தரத்துக்கேதுவல்ல. அந்தப்பிராரத்த கர்ம்மமானது லோகயாத்திரைகளை, அதிகாரியாத அஸ்மதாதிகாருக்கே யெகதேகத்திலே யோக்கியமாம். அப்படித் திரமிருக்காலும், ஞானத்துக்கு விரோதானமில்லை எப்படியென்னில் பாலய, கௌமார வார்த்திகாதிபேத முண்டானாலும், ஒன்றே தேகமாவதெப்படியோ, அப்படியென்றறி, சகலவிஷயத்துக்கும் மித்தையாத்துவம் சாதிக்கப்பட்ட ஞானத்துக்கும், விஷயங்களுக்குஞ் சத்தியத்துவஞ் சம்பாதித்திருக்கும், பிராரத்தபோகத்துக்கும், அந்யோந்திய விரோதமுண்டாகையால், ஞானிக்கு அதெப்படிப் போகசித்தியாமென்றால் மித்தியாத்மக சொற்பன இந்திரசாலாதிகளில், கிரமத்தால், வனிதாதி சுவர்க்காதிதோற்றங்களில், மைதுனாதி, விஷயாதி, நிசபோகமாவதெப்படியோ அப்படியே வியாவகாரிக, பிராரத்தபோகவிஷயங்களு

க்குச் சத்தியத்துவதரிசன முண்டானாலல்லது ஆகாதென்கிற நியமமில்லை. ஆகையால் பிராரத்தபோகத்துக்கும், ஞானத்துக்கும் அந்நியோந்நியவிரோதமில்லை. அதனால், ஞானிக்கும் பிராரத்தபோக முண்டென்பது சித்தம். இவ்விடத்தில் பிராந்திகெட்டால், அந்தட்சணத்திலே சுத்திகாரசித சொரூபத்துக்கு ஹானியாவதுபோல, ஞானத்தால் அஞ்ஞானமழிந்தமாத்திரத்திலே சத்துப் பிரபஞ்சமுந் தோன்றுவ தில்லை. ஆகையால், விவேகிக்குப் பிராரத்தபோகம் எப்படியாமென்றால், சுத்திகாரசிதமென்பது நிருபாதிகப்பிர்ம்மம். அதுகாரணத்தால் மறைந்தபோது, ரசிதசொரூபத்துக் கானியுண்டாம். இந்தச்சோபாதிகப் பிர்ம்மம் அப்படியல்ல, தெளிந்தகுளத்தின் தீரத்திலிருந்தவன் தானந்தச்சலத்தில், அதோமுகனாகித் தோன்றுவது பொய்யென்று புத்திநிச்சித மானாலும், அந்த அதோமுகந்தோன்றியே யிருக்கிறதுபோல, அகங்காரசம்பந்தமான, சீவத்துவாதிகமெல்லாம், மித்தை, சத்தியமான பிரத்தியெகாத்மன் தானென்றறிந்தாலும், சீவத்துவாதி பிரபஞ்சமிருப்பதனால், சீவன்முக்தனுக்குப் பிராரத்தபோக விவகாரம் அங்கீகரிக்க வேண்டும்.

சீவன்முக்தனுக்குச் சற்குணசதுஷ்டயம்.

அந்தச் சீவன்முக்தனுக்கு மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை யெனசற்குண சதுஷ்டயமுண்டு, அவற்றுள், சற்புருஷ சிநேகமே மைத்திரி, துக்காத்மாக்க ளிடத்தில் இரக்கமே கருணை, சுகிர்தாதிகாரிகளிடத்தில், சந்தோஷமே முதிதை பாபிகளிடத்தில் ராகத்துவேஷமில்லாததே உபேக்ஷை.

சீவன்முக்தனுக்குப் பஞ்சப்பிரயோசனம்.

சீவன்முக்தனுக்கு ஞானரக்ஷை, தபசு, சர்வசமவாதம், துக்கக்ஷயம், சுகாவிர்ப்பாவம், எனப்பஞ்சப்பிரயோசனமுண்டு. அவற்றுள் வாசனாக்ஷயமனோநாசங்களால், புத்தி நிர்மலமாயிருப்பதே ஞானரக்ஷை, பின்னதனால் இந்திரியங்களும், மனசும் ஏகாக்கிரமே தபசு. பின் தபோநிஷ்டனாகையால், ஆபாலபண்டிதரெல்லாம் யோகீச்சுரனென்று ஸ்துதி நமஸ்காராதிகள் செய்வதே சர்வசமவாதம், பின் அஸ்மிதாதிபஞ்சக்கிலேச மில்லாதிருப்பதே துக்கக்ஷயம், பின்னந்தச்சாதனங்களால், தனக்கொன்றும்பிரதிபந்தமில்லாதிருப்பதே சுகாவிர்ப்பாவம்.

ஞானதசச்சின்னம் நிக்கிரானுக்கிரகம்.

அக்குரோத, வைராக்கிய, சிதேந்திரியத்துவ, தமை, க்ஷமை, சனப்பிரத்தியத்துவ, அலோப, தாத்திருத்துவ, அபய நிர்ம்மதமென ஞானதசச்சின்னமுண்டு.

அந்தச்சீவன் முத்தனால். உதாசீன, பாபி. சிஷ்ய, பத்தசன நிக்கிரானுக்கிரக முண்டாம்.

அவன்செய்கிற அசத்தான சரித்திரங்கண்டு உதா சீனஞ்செய்கிறவனுக்குப் புண்ணிய க்ஷயமும், அவன தரிசனபரிசனத்தால், பாபிகளுக்குப் பாபக்ஷயமும், அவனால், சிஷ்யனுக்கு முத்தியும் அவனையனுராகத்தாலாசிரயிக்கும் பக்தனுக்குச்சுகிர்தாதிசயமுமுண்டாம் கத்திருத்வாதிகர்ம்மமில்லாதசீவன் முத்தனால் வேதாந்தவாக்கிய சத்தியதாற்பரியானுகூலதர்க்க திருஷ்டாந்தாதிகளால், யத்ன புரசரமான பிர்ம்மோபதேசாதிகமெப்படியாமென்றால், அகிரோகிதபிர்ம்மசொரூபமாகையால், ராகத்துவேஷாதிகளில்லாத ஈச்சுரனுக்கு ஜனங்களுடைய சுகிர்த துஷ்கிருதவசத்தால் அனுக்கிரக நிக்கிரசேஷ்டை யுண்டாவதுபோலச், சாதகருடைய சுகிர்தாதிப் பிரவாகவசத்தால் ஞானோபதேசாதிகளாம்.

பிராரத்தகர்ம்மசமஸ்கார சதுஷ்டயம்.

சீவன் முத்தரிற்சொல்லப்பட்ட லக்ஷணங்களிலிராமல், வெகுபிரகாரமாயிருப்பதென்னெனில், பிராரத்தகர்ம்ம சமஸ்காரமானது, தீவிர, மத்திய, மந்த, சுத்தமெனச்சதுர்விதமுண்டு. அவற்றுள்- சம்மியஞ்ஞானியானாலும், போகதாற்பரியனாய்ப் பசுவைப்போல, ஆத்மப்பிரீதிமாத்திரமா யிருப்பதே தீவிர சமஸ்காரம். போக்துருக்கு முக்கியமானாலும், தான் ஆத்துமதாற்பரியனாய்ப் பாலனைப்போல, விநோதமாத்திரமாயிருப்பதே மத்தியசமஸ்காரம். போகதாற்பரியத்தில் உன்மத்தனைப்போல நிச்சிதமில்லாதிருப்பதே மந்தசமஸ்காரம். சர்வவியாபாரமுமழிந்து நிருபாதிகாத்மனிடத்தில் தாற்பரியனாய்ப் பரமுத்தனைப் போலப் பரமசுகத்திலிருப்பதே சுத்தசமஸ்காரம், இப்படிப் பிராரத்த சமஸ்காரத்திரிந்த சீவன்முத்தர் நானாவர்த்தனைகளி லிருந்தாலும், ருசுகுடிலகதியாகிய நதிகள்பலவும் சமுத்திரசம்பந்தத்தி லொன்றேயாவதுபோல முடிவிடத்தில் பிர்ம்ம சொரூபமாயிருக்கிற முத்திசுகம் ஒரே பிரகாரமாம்.

பிராரத்தத்திரயம்.

இச்சாப்பிராரத்தம், அநிச்சாப்பிராரத்தம் பரேச்சாப்பிராரத்தமெ னத் தேவாதிகளா லுபகரிக்கிற பிராரத்தத்திரயஞ் சுகதுக்க ரூபமாம். அவற்றுள் தனக்கு அபத்திய சேவகாதிகத்தால், துன்பம்வருமென்ற றிந்தவிடத்தும், விடாமற் செய்விக்கிறதே இச்சாப்பிராரத்தம். தான் செய்யமாட்டேனென்றாலும் இராசாக்கினைபோல இம்சாதிகளைச் செ ய்விக்கிறதே அநிச்சாப்பிராரத்தம் தனக்கு இச்சானிச்சையில்லாதிரு ந்தாலும்,பரதாக்ஷண்ணியத்தாலூட்டுவிப்பதேபரேச்சாப் பிராரத்தம்.

சீவன்முத்தர்களுடையவிசித்திரசரித்திரம்.

இந்தத்திரிவித பிராரத்தானுசாரத்திருக்க சீவன் முத்தருக்கே, விசி த்திரசரித்திரமுண்டென்பதற்குச் சனக, சட பரத, யாஞ்ஞியவல்கிய சுக, வாமதேவ, பிரகலாத, கௌதம, வசிஷ்ட, வான்மீக, விசுவாமித்தி ர, தூர்வாச, வியாச, நாரதாதிவர்த்தனை மேதமேறி தரிசனமாம்.

அஞ்ஞானிக்கும் ஞானிக்கும்பேதம்.

இப்படி ஞானிக்குப் பிராரத்தபோகம் அங்கிகரிக்கிறதால், அஞ்ஞா னிக்கும் ஞானிக்கும் பேதமென்னவென்றால், விராத்திய சுரோத்திய ருக்கு, வேதாத்தியயனபரித்தியாக, வேதாத்தி யயனயுத்திகளால், பே தமல்லது, ஆகாரம், நித்திரை, பேதமில்லாததுபோல, அஞ்ஞானிக்கு ம், ஞானிக்கும் இதய பந்த சம்பந்தாசம்பந்தபேதமல்லது, போகஸ்தி திபேதமில்லை. தத்வஞானத்தால்பிர்ம்மப் பிராரத்தமாய் வியாக்கிராசங் தரிசனம்போலச் சீவத்துவங்கெடுவதாய்த் தன்னுடையநாசத்துக்கு எப்படி சீவன் பிரவர்த்திப்பனென்றால், தேவத்துவவாஞ்சையால், க ங்கை பிரயாகையாதிகளில், நரத்துவ பரித்தியாகம் அங்கிகரிப்பது போலப், பிரத்தியெகாத்மம் பிர்ம்மரூபமாகவேண்டித் தத்துவஞானத் தால் தன்னை நாசஞ்செய்யவுடன்படுவன்.

சீவன்முத்தருடைய சாபானுக்கிரகசாமர்த்தியம்.

வியாசாதிகள்போலச் சாபானுக்கிரக சாமர்த்திய மெவனுக்குண் டோ. அவனேதத்துவஞானியல்லது வேறொருத்தனல்லவெனில், அ ந்தச்சாமர்த்தியம் தபசின்பலமல்லது. தத்துவஞானபலமல்ல. ஆனால் தத்துவஞானத்துக்குத் தபசேமூலமென்னுஞ் சுருதியுண்டாகையால்

தமோராகிகளுக்குத் தத்துவஞானமெங்கேயென்னில், சாபாதிகளுக்குக்காரணம், சகாமியதபசென்றும், நிஷ்காமியதபசினால் தத்துவஞானமென்றும்அறி. அந்த வியாசாதிகளுக்கு, ஞானசாமர்த்திய மிரண்டுமுண்டென்னில், அவர்களுக்கு உபயவித தபசுமுண்டாகையால், ஞானசாமர்த்திய மிரண்டுபலமுமுண்டு. மற்றொன்றொன்றை யாசரித்தவனுக்கு, ஒன்றொன்றே சித்திக்கும் அதனால் விரோதமில்லை. சாபாதிசாமர்த்தியமில்லாமல், விதிசூன்னியனை தத்துவஞானியைக் கிரியாநிஷ்டரெல்லாம் நிந்திக்கிறாரோவென்னில், கிரியாநிஷ்டர்களையும், விஷயலம்படரான மூடர் நிந்திக்கிறார்கள். அந்தநிந்தையால் அவருக்கு வைஷம்மியமில்லை. அந்த விஷயலம்படர் நிந்தையால், கிரியாநிஷ்டரானவர்க்கு எப்படி வைஷம்மியமில்லையோ அப்படியே தேகாத்துமபுத்தியுள்ள நிஷ்டர்செய்யும் நிந்தையால், தத்துவஞானிக்கு யாதொரு ஆனியுமில்லை.

ஜீவன்முத்தன் லவுகிகனாவதனால், பிராரத்தவசத்தால், வித்வதவஸ்தையிலிருந்தாலும், வாயுவசத்தாலான சிதாசிதமேக படலக்ஷணம்போல, நித்தியநிர்ம்மலனானவன். மற்றும் அகிர்ஷ்டமென்று பரிசாரகனிடத்தில் சரிக்கு மூடனைப்போலக் கலாஞானத்துள் மௌனனாயிருந்தாலும், கற்பிதகதை வைதபாசுருதிவாக்கிய வைகரிவிஷயத்துள் ஆலரியனாகும், மற்றும் அப்பிரஸ்துதமறியாத வெகுபாஷிதனைப்போல எனவசனித்தாலும், கூடாவபிப்பிராய கற்பிதமான சத்தியாத்துவைத நிஷ்டாநிஷ்டமாயிப் பிராயமாகும். மற்றும், ஆசாரியனைப்போலச் சிஷ்யருக்கு உபதேசித்திருந்தாலும், ஆக்மநித்தியமுத்தனாய்ப் போத்தியபோதகத்துவமாயாநிரசனாத்மகனென்னும், நிருதநிச்சயத்தால், ககனமணிபோலக், குருத்துவாபிமானரகிதனாயிருப்பன். மற்றும் உன்மத்தனைப்போல, அஞசிதவக்தாவானாலும், அவைதபாவமழிந் தாத்மாராமனானதால், சாதசமயத்துள் அதிகாமரசத்துமிதுனவாக்கியம்போல அனாபிஷேய விஷயமாகும். மற்றும் கபிசாக்கிர காஷ்டனைப்போலக் கலகலெனப்பேசினாலும், பூரணைக்கியசுபாவநிஷ்டனாவதனால், விரகிகள்மனம்போல அப்பிராப்பியானுசந்தானமாகும். மற்றும், வெகுவியோகாதுரனாவமுள்ள கிராம்மியசனம்போலச், சோகஞ்செய்தாலும், சர்வவேதாந்தியங்களும், பிர்ம்மாங்கிசங்களென்று ஆலோசனைசெய்யாத கற்பிதசாக்ஷாத்காராவஸ்தையில், நிக்கிரகிக்க சர்வவேதாந்திரியகர்ம்மவிஷயமானமநோநாசமாகும் மற்றும், விவிதவெகு ரூபதரிசனவிநோதத்துள், ஆட்டகாசஞ் செய்தாலும், விசித்திர புண்ணிய பாபாதி விகாரமுஞ்

சத்திய மென்று பிரதிபாதிக்கிற மீமாங்கிசாதிதரிசன விஷயமான பரியாசமாகும், மற்றும், விடனைப்போல ஸ்திரீலோலனு யிருந்தாலும், பூரணைக்கிய சுபாவனுவதல்லாமல், நிசானந்தானுபவியாகும், மற்றுஞ்சத்துருவைப்போலக் குரோதத்தால் சந்தாபஞ்செய்தாலும், க்ஷேத்திரதசுனுக்கினிபோல விசிஷ்டபலசம்பத்துக்கு ஆசிரயஞ் செய்வனென்று விசுவாசஞ் செய்யவேண்டும்.

விதேககைவல்லியமடையுங்கிரமம்.

இதற்குமேல் எக்காலத்திலும், எத்தேசத்திலும், யாதொரு சரீரமும் அடையாதே சச்சிதானந்தப் பிர்ம்மசொரூபத்திலிருப்பதே விதேககைவல்லியமாம் அந்தவிதேக கைவல்லியமடையுங் கிரமமாவது யாதொருமுமூட்சுவுக்கும் நித்திய கர்ம்மானுஷ்டானத்தால், தர்ம்மோத்பத்தி, தர்ம்மோத்பத்தியால் பாபக்ஷயம், பாபக்ஷயத்தால் சித்தசுத்தி சித்த சுத்தியால், சமுசாரதோஷதரிசனம், சமுசாரதோஷதரிசனத்தால் விஷயவிரக்தி, விஷயவிரக்தியால், மோக்ஷாபேக்ஷை, மோக்ஷாபேக்ஷையால் பாகிய கர்ம்மபரித்தியாகம் பாகியகர்ம்ம பரித்தியாகத்தால் யோகாப்பியாசம். யோகாப்பியாசத்தால், பிரத்தியெகாத்மப்பிரீதி பிரத்தியெ காத்துமப்பிரீதியால், தத்துவமசிவாக்கியவிசாரம். தத்துவமசிவாக்கிய விசாரத்தால், அத்துவைதஞானம். அத்துவைத ஞானத்தால், அவித்தியாநாசம். அவித்தியாநாசத்தால் துவைதப்பிராந்திநஷ்டம், துவைதப்பிராந்திநஷ்டத்தால் சுகதுக்கபரித்தியாகம். சுகதுக்கபரித்தியாகத்தால் ராகத்துவேஷ ஆனி ராகத்து வேஷ ஆனியால், விதிநிஷேதநிரசனம் விதிநிஷேதநிரசனத்தால் புண்ணிய பாபக்ஷயம் புண்ணியபாபக்ஷயத்தால் தேகாபாவ சித்தி, தேகாபாவசித்தியால் சர்வ்வபாபவிமோசனம். சர்வ்வபாபவிமோசனத்தால் சர்வ்வோத்கிருஷ்டமான பரமஸ்தானமான புநராவிர்த்திரகிதமான, சகலசாஸ்திர தாற்பரிய வசனமான, நாமசாதிக்கிரியாவாசனை புகாதமனோவாசாமகோசுரமான நித்தியானந்த சொரூபமாயிருக்கிறதே விதேககைவல்லியம்.

இதுவேசுருதி. ஆசாரியப்பிரசாதசித்தி இதுவே சகலசாஸ்திரார்த்த நிர்ணயம். பிர்ம்மபரிச்சேதம் சம்பூர்ணம்.

விவேகசிந்தாமணி முற்றிற்று.

இதையகமல அஷ்டதளத்தில் மனது வியாபாரம்பண்ணும் விபரம்.

கிழக்கு. இந்திரதளத்தில் மனதுவியாபாரம் பண்ணும்போது சுகிர்த சிந்தனை.

தென்கிழக்கு. அக்கினிதளத்தில் மனதுவியாபாரம் பண்ணும்போது கடினசிந்தைகுரூரம்.

தெற்கு. எமதளத்தில் மனதுவியாபாரம் பண்ணும்போது பாபசிந்தனை.

தென்மேற்கு. நிருதிதளத்தில் மனது வியாபாரம் பண்ணும்போது கோபசிந்தனை.

மேற்கு, வருணதளத்தில் மனதுவியாபாரம பண்ணும்போது சமூசயசிந்தனை.

வடமேற்கு. வாயுதளத்தில் மனதுவியாபாரம் பண்ணும்போது சலனசிந்தனை.

வடக்கு. குபேரதளத்தில் மனதுவியாபாரம் பண்ணும்போது தர்மசிந்தனை.

வடகிழக்கு. ஈசானியதளத்தில் மனதுவியாபாரம் பண்ணும்போது வைராக்கியசிந்தனை.

கேசரம் - குச்சு - கர்ணிகை யிவற்றிலிருக்கும்போது சொற்பனவஸ்தை.

அககிரம் - மத்தியகதி - உன்மனி யிவற்றிலிருக்கும்போது சுழுத்தியவஸ்தை.

ஸ்ரீகுருவேநம:,